விலை ரூபா: 15.00

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 19 திங்கட்கிழமை (04.07.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 197

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி சபை வேட்பாளர்களுக்கான செயலமர்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது அமைச்சர் குழாம் நிற்பதை படங்களில் காணலாம்.

# போரில் இழந்த உயிர்களைத்தவிர ஏனைய இழப்புக்களை ஜனாதிபதி மீட்டுத்தருவார்



## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அமைச்சர் பசில் உரை

(யாழ்ப்பாணம்)

போரினால் இழந்த உயிர்களைத் தவிர ஏனைய அனைத்து இழப்புக்களையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உங்களுக்கு மீட்டுத்தருவார். யாழ். மாவட்டம் இலங்கையின் முன்னணி மாவட்டமாக திகழ வைப்பதில் அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் நேற்று 16 அமைச்சர்கள் கூடி தேர்தல் பிரசார வியூகம் அமைத்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பதினாறு அமைச்சர்கள் ஒன்றாக கலந்து கொண்ட நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை சேர்ந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சி சபை வேட்பாளர்களுக்கான செயலமர்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற போதே அந் நிகழ்வில் பதினாறு அமைச்சர்களும், முக்கிய அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் 23-ம் திகதி நடைபெற இருக்கும் நிலையில் ஆளும் தரப்பின் தேர்தல் பிரசாரத்தை முழு மூச்சில் முன்னெடுக்கும் நோக்கில் பதினாறு அமைச்சர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தேர்தல் வெற்றிக்கான வியூகம் அமைத்தனர். (ந)

## வடமராட்சி கிழக்கில் மக்கள் மீள்குடியேறினர்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் உள்ள வெற்றிலைக்கேணி, முள்ளியான், போக்கறுப்பு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் அப்பகுதிகளில் மீள்குடியமர்த்தப்பட்டனர்.

நேற்று நடந்த இந் நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரியகைத்தொழில்கள் மற்றும்சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ்.கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யுத்தத்தால் இடம்பெயர்ந்து இராமாவில், குடத்தனை ஆகிய முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த 385 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டனர்.

இதேவேளை இராணுவத்தினரால் ஒவ்வொன்றும் 6 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட 10 வீடுகளும் கையளிக்கப்பட்டன.

மேலும் மீள்குடியேறிய மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ந-6,64)

## ரணிலின் அமெரிக்கப் பயணம் இலங்கை அரசாங்கமே ஏற்பாடு

(நியூயோர்க்)

அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கான தேவைகளை அங்குள்ள இலங்கை தூதரகமே செய்து வருவதாக தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவின் குடியரசுக் கட்சி தலைவர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் பலரையும் சந்தித்துள்ள ரணில் விக்கிரமசிங்க நாளை 5 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கை குறித்து பான் கீ மூனுடனான சந்திப்பின் போது அவர் ரணிலுடன் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின்அறிக்கை தொடர்பிலான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு குறித்து இச்சந்திப்பில்

(02ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் கொலைக்களம் அவுஸ்திரேலிய ஏபிசியில்

(சிட்னி)

சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட கொலைக்களம்ஆவணப்படம்அவுஸ்திரேலியாவின் ஏ.பி.சி. தொலைக்காட்சியில் இன்று காண்பிக்கப்படவுள்ளது.

திங்கட்கிழமை இரவு 8.30 மணிக்கு இக்காணொளி காண்பிக்கப்படவுள்ளது. இதனை மீண்டும் செவ்வாய்க்கிழமை இரவு 11.30

(20ஆம் பக்கம் பார்க்க)

# எமது அரசியல் பிரச்சினைக்கு யதார்த்தமான தீர்வு தேவை

## அமைச்சர் டக்ளஸ் உரை

எமது தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு யதார்த்தபூர்வமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, யாழ். மாவட்டங்களை சேர்ந்த சுதந்திரக் கட்சி வேட்பாளர்களுக்குரிய பயிற்சிப் பட்டறை நேற்றுக்காலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் அமைச்சர்களின் யாழ்.விஜயம் தடுக்கப்பட்டிருந்தது. வடக்கு நோக்கிய அமைச்சர்களின் வருகைக்கு கறுப்புக்கொடி காட்டிய காலமாக அமைந்திருந்தது. ஆனால் இன்றைய நிலைமை அவ்வாறு இல்லை. இன்று அமைச்சர்கள் வடபகுதிக்கு விஜயம் செய்து மக்களின் குறைகளை கேட்டறிகின்றனர். இதனால் அனைவரிடையேயும் சகோதரத்துவ மனப்பான்மை உருவாகின்றது. இது ஒரு வரவேற்கத்தக்க விடயமாகும். இவை எல்லாம் எமது அரசியல் வெற்றிக்கான அறிகுறிகளே. இன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் எதிர்ப்பு அரசியலை நடத்திக்கொண்டு தமது சுயலாப அரசியலுக்காக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆயினும் மக்கள் மீது தாம் அதிக அக்கறை உடையவர்கள் என பாசாங்கு காட்டி நீலிக் கண்ணீர் வடிக்கும் இவர்களை நோக்கி எமது மக்கள் கறுப்புக்கொடி காட்டும் காலம் மிக விரைவில் வரும் .

மக்களோடு மக்களாக வாழ்ந்து மக்களுக்கு சேவை செய்வதற்காக காத்திருக்கின்றேன். இங்கு வந்துள்ள அமைச்சர்கள் உங்கள் எண்ணங்களை புரிந்துகொள்வார்கள். இவர்களின் காத்திரமான நடவடிக்கைகள் எமது வாழ்வாதார உரிமைகளை வென்றெடுத்து கடந்த காலங்களில் இழந்தவற்றை மீளப்பெற்றிட உதவும் என்பதில் ஐயமில்லை. இது எமது நம்பிக்கையுமாகும்.

மக்களின் சேவைக்காக நாம் எவ்வளவுதான் அர்ப்பணித்து செயலாற்றினாலும் சில ஊடகங்கள் எம்மை பற்றி தவறாகவே செய்திகளை வெளியிட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, பசில் ராஜபக்ச, சுசில் பிறேமஜெயந்த, டளஸ் அழகப்பெரும ஆகிய முக்கிய அமைச்சர்கள் உட்பட பல அமைச்சர்களும் கலந்துகொண்டனர். (ந-2-4)

## விளையாட்டு வினையானது குடும்பஸ்தர் மரணம்


(அல்லைப்பிட்டி)

அல்லைப்பிட்டி கடற்கரையில் நண்பர்களுடன் சேர்ந்து குத்துக்கரணம் அடித்து விளையாடிய போது உடலில் காயம் ஏற்பட்ட நிலையில் சிகிச்சைக்கென யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனளிக்காது அங்கு மரணமானார்.

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான எம்.சசிக்குமார் (வயது 37) என்பவரே மரணமானவர் ஆவார். ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.


சடலம் தற்போது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந)





வடமராட்சி கிழக்கில் நேற்று மக்கள் மீள்குடியேற்றப்பட்டனர். இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இப்பகுதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட 10 வீடுகளையும் அமைச்சர் பசில் [illegible]ளாளிகளிடம் கையளித்தார்.

# சன் ரி.வியின் தலைமை அதிகாரி சென்னை விமான நிலையத்தில் கைது



சன் ரி.வியின் தலைமைச் செயல் அதிகாரியும், கலாநிதி மாறனின் கல்லூரி நண்பருமாகிய ஹன்ஸ்குமார் சக்ஸ்ஷேனா மோசடி வழக்கொன்றில் சென்னை விமான நிலையத்தில் தமிழக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தி.மு.க ஆட்சிக்கு வந்த பின்னர் சன் தெலைக்காட்சி சினிமாவிலும் கால் பதித்தது. சன் பிக்சர்ஸ் எனும் பெயரில் திரைப்படங்களை வாங்கி விநியோகித்து வந்தது. சுமார் 600 இற்கும் மேற்பட்ட திரையரங்குகளை சன் தொலைக்காட்சி குழுமம் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. இதனால் இவர்களை மீறி எவரும் சினிமா தயாரிக்கவோ, எடுத்த திரைப்படங்களை ரிலீஸ் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

திரைப்படங்களை எடுத்தால் சன் தொலைக்காட்சி அல்லது கலைஞர் தொலைக்காட்சி, அழகிரி, ஸ்டாலின் ஆகியோர் நடத்தும் தயாரிப்பு நிறுவனங்களிடம் விற்றுவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சென்னை கோடம்பாக்கத்தில் கடந்த ஐந்து வருடமாக கருணாநிதி குடும்பத்தினரின் அதிகாரச் செல்வாக்கால் சினிமாவை வளைத்ததன் விளைவாய் பல சிறிய தயாரிப்பாளர்கள் சினிமாவை விட்டுவிட்டு சொந்த ஊருக்கு திரும்பிய கதையும் உண்டு.

இப்போது ஆட்சிமாற்றம் ஏற்பட்ட நிலையில் கலைஞர், சன், அழகிரி, ஸ்டாலின் நிறுவனங்கள் திரைப்படங்களை இப்போதைக்கு வாங்குவதோ, தயாரிப்பதோ இல்லை என்று முடிபு எடுத்துள்ளன. காரணம் கடந்த தி.மு.க. ஆட்சியால் பாதிக்கப்பட்ட பல திரைத்துறையினர் கருணாநிதி குடும்பத்தினரால் எப்படி தாங்கள் பாதிக்கப்பட்டோம் என்று காவல்துறையினரிடம் பட்டியல் இட்டனர். தவிரவும் கடந்த ஐந்து ஆண்டுகளாக இவர்களின் அதிகார அடக்குமுறையினால் முடங்கிப்போன திரைப்படங்களை வெளியிட முன்னுரிமை வழங்கப்படும் என்ற முடிபும் தயாரிப்பாளர் சங்கத்தில் எடுக்கப்பட்டது.

இந்நிலையில் தீராத விளையாட்டுப்பிள்ளை எனும் படத்தின் தயாரிப்பாளர் செல்வராஜ் என்பவர் சன் பிக்சர்ஸ் செயல் அதிகாரியான சக்ஸ்ஷேனா மீது மிரட்டல், மோசடி புகார்கள் கொடுத்திருந்தார். தான் தயாரித்த படத்தை ஆளும் கட்சி செல்வாக்கில் வாங்கிக்கொண்ட சக்ஷோனா 90 இலட்சம் ரூபா மோசடி செய்ததாக புகார் கொடுத்தார். இந்தப் புகாரை பதிவு செய்த பொலிசார் நேற்று மாலை சென்னை விமான நிலையத்தில் வைத்து கைது செய்தனர்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் ஸ்பெக்ட்ரம் வழக்கில் சிபிஐ சக்ஷேனாவிடம் விசாரணை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

## சரவணபவன் எம்.பியின் வாகனம் விபத்து

(மதவாச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் வாகனம் நேற்று அதிகாலை மதவாச்சியில் பாரிய விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் சிறுகாயங்களுக்குள்ளான போதிலும் அவரின் மெய்ப்பாதுகாப்பு உத்தியோகத்தர் பலத்த காயமடைந்துள்ளதுடன் வாகனமும் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

கிளிநொச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக அவர் கொழும்பிலிருந்து பயணித்துக்கொண்டிருந்தபோது மதவாச்சி சங்கிலிகனதராவ பகுதியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவர்களின் வாகனத்திற்கு எதிரே வந்த வாகனம் வீதிக்கு நடுவில் பயணித்த காரணத்தினால் அதிலிருந்து விடுபடுவதற்கு அவரின் சாரதி முயற்சித்தபோதே கட்டுப்பாட்டை இழந்த வாகனம் மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## சித்தி விநாயகர் ஆலய மகோற்சவம்

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை அருள்மிகு சித்திவிநாயகர் தேவஸ்தான மகோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் நண்பகல் 12 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஸ்ரீ -2-78)

# ரணிலின் அமெரிக்கப் பய...

பான் கீ மூனிடம் அவர் எடுத்துக் கூறவுள்ளார்.

அதேவேளை வாசிங்டனில் நடைபெற்ற சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் நிறைவேற்றுக் குழுவின் கூட்டத்திலும் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டுள்ளார்.

இவ்வமைப்பின் பிரதித் தலைவராகவும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் தலைவராகவும் அவர் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் ஜோன் ஹவார்ட் தலைமையிலான இவ்வமைப்பில் 8 நாடுகளின் ஆளும் கட்சிகளும் 11 நாடுகளின் எதிர்க்கட்சிகளும் அங்கம் வகிக்கின்றன.

அத்துடன் அமெரிக்க குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான செனட்டர் ஜோன் மக்கெய்ன் வெள்ளை மாளிகை தேசியப் பாதுகாப்புச்சபை மற்றும் அமெரிக்க ராஜாங்கத்திணைக்களம் ஆகியவற்றின் மூத்த அதிகாரிகளையும் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேசியுள்ளார். ஆயினும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து செய்திகள் வெளியிடப்படவில்லை.

- அதேவேளை ரணில் விக்கிரமசிங்கவிற்கான பயணம் மற்றும் தங்குமிட வசதிகளை அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதரகமும் நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதியின் செயலகமும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந)


வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ்.போதனா வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலைக்கு சப்பிளேயர், ரீ மேக்கர், இடியப்ப மேக்கர் போன்ற ஆட்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். நேரில் வரவும்.

தொடர்பு: 0771387687, 0775009221

(5481)

# இன்று ஒரு தகவல்

## நமக்குள்ளே ஒரு புதையல்

ஒரு பெரிய சந்தை.

அது பல பேர் வந்து போகும் இடம்.

அங்கே ஒரு பிச்சைக்காரன் பிச்சையெடுத்தபடி நின்று கொண்டிருந்தான்.

நீண்டகாலமாக அவன் அந்த ஒரே இடத்தில் நின்று பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான்.

என்றாலும் அவன் வாயைத் திறந்து,"எனக்குப் பிச்சை போடுங்கள்" என்று யாரையும் கேட்டதில்லை.

அவன் தினமும் காலையில் அங்கே வருவான். அந்த இடத்தில் நிற்பான்.வலது கையை மட்டும் முன்னால் நீட்டி ஏந்திக் கொண்டிருப்பான். அவன் வாயைத் திறந்து எதுவும் பேசுவதில்லை.

அந்த வழியாக வருகிறவர்களும் போகிறவர்களும் தாங்களாக அவன் கையில் ஏதாவது காசு போட்டு விட்டு போய் கொண்டிருப்பார்கள்.

அந்த ஒரே இடத்தில் நின்று ஐம்பது வருடமாக அவன் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று ஒருநாள் அவன் அந்த இடத்திலேயே விழுந்து இறந்து போனான்.

ஊர் மக்கள் பார்த்தார்கள்!

ஐயோ பாவம்! இப்படி அநாதையாக விழுந்து இறந்து போய்விட்டானே! என்று பரிதாபப்பட்டார்கள்.

அந்த ஊர் மக்களுக்கு அவன் மீது மிகவும் அனுதாபம்!

இவன் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தால் கூட ஒரு வித்தியாசமான ஆள்.யாரையும் தொந்தரவு செய்வதில்லை.

ஊர் மக்கள் அனைவரும் ஒன்று கூடி, "இந்தப் பிச்சைக்காரனுக்கு இதே இடத்தில் ஒரு சிலை வைக்க வேண்டும்!" என்று ஒரு தீர்மானம் போட்டார்கள்.

உடனே நிதி வசூலிக்க ஆரம்பித்தார்கள். பல பேர் முன் வந்து தாராளமாக நிதி கொடுத்தார்கள்.

அப்படி நிறையப் பணம் சேர்ந்து விட்டது.

அந்த ஆள் நின்று கொண்டிருந்த இடத்திலேயே அஸ்திவாரம் தோண்ட ஆரம்பித்தார்கள்.

ஒரு இரண்டு அடி ஆழம்தான் தோண்டியிருப்பார்கள்.

திடீரென்று ஒரு வித்தியாசமான சத்தம், "டங் டங்" என்று கேட்டது!

அவசர அவசரமாக அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தார்கள்! ஒரு பெரிய செப்புக்குடம் தெரிந்தது! அதை வெளியே எடுத்து அதில் என்ன இருக்கிறது என்று பார்த்தார்கள்.

அந்தச் செப்புக்குடத்தில் ஏராளமான தங்க நாணயங்கள் இருந்தன.

அதைப் பார்த்ததும் கூட்டத்தில் இருந்தவர்கள் எல்லோரும் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள்.

கூட்டத்தில் ஒருவர், "பார்த்தீர்களா? இந்தப் பிச்சைக்காரன் தன் காலுக்கு அடியிலேயே புதையல் இருக்கிறது என்பது தெரியாததால் போகிறவர்கள், வருகிறவர்களிடமெல்லாம் 'பைசா' வுக்குக் கையேந்தி நின்று கொண்டிருந்தே செத்துப் போனான்!" என்று கூறினார்.

அப்போது அந்த வழியாகத் துறவி ஒருவர் வந்தார்.

அவர் கூட்டத்தைப் பார்த்துச் சொன்னார்:

ஆமாம்! ஒவ்வொரு மனிதனும் கூட இப்படித்தான் செய்து கொண்டிருக்கிறார்கள்! தன் மனதில் குவிந்திருக்கும் திறமையையும், மகிழ்ச்சியையும், இன்பத்தையும், தெய்வத்தையும் அவன் புரிந்து கொள்வதில்லை. அது வெளியே எங்கேயோ இருப்பதாக நினைத்துக் கொண்டு அதைத் தேடியபடியே மக்கள் காலம் முழுவதையும் கழித்து விடுகிறார்கள்.

இவ்விதம் சொல்லிவிட்டு அந்தத் துறவி அங்கிருந்து சென்றார்.

கூட்டத்தில் இருந்தவர்கள் அதன் பின்னர்தான் சிந்திக்க ஆரம்பித்தார்கள்.

நம்மிடம் என்னென்ன இருக்கிறது என்பதை நாம் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறோம். ஆனால் அதையெல்லாம் தேடி வெளியே அலைந்து கொண்டிருக்கிறோம் என்பதே இந்தக் கதையின் கருத்தாகும்.

**ஜீனாய்ட்** என்று ஒரு ஞானி இருந்தார்.

ஒரு சீடன் அவரிடம் வந்து, உங்களிடம் ஞானம் என்ற முத்து இருப்பதாகச் சொல்கிறார்களே! எனக்கு அதில் கொஞ்சம் தேவை.

"ஒன்று– அதை என்னிடம் விற்று விடுங்கள். இல்லாவிட்டால் இனாமாகக் கொடுங்கள்" என்று கேட்டான்.

அதற்கு அந்த ஞானி, "உனக்கு அதை நான் விற்பதற்கில்லை. ஏனென்றால் அதன் விலையை உன்னால் கொடுக்க முடியாது. சரி, இனாமாகக் கொடுக்கலாமென்றால்... இனாமாகக் கொடுப்பதை நீ மதிக்கமாட்டாய்! ஆதலால் என்னைப் போல் நீயும் கடவுள் என்ற சமுத்திரத்தில் மூழ்கி எழுந்திரு! அப்போது நீயும் ஒரு முத்து எடுத்துக் கொண்டு வரலாம்!" என்று பதிலளித்தார்.

இதெல்லாம் வெளியில் வாங்குகிற சமாச்சாரம் இல்லை. உள்ளத்தில் ஆழ்ந்து மூழ்கும் முழுமையான முயற்சி இருக்க வேண்டும்!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பூநகரி பள்ளிக்குடா கிராமத்தை முன்மாதிரியான கிராமமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

## அமைச்சர் சந்திரசிறி தெரிவிப்பு

(பூநகரி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பள்ளிக்குடா கிராமத்தை முன்மாதிரியான கிராமமாக ஆக்குவதற்கு புனர்வாழ்வு சிறைச்சாலை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதனையடுத்து அப்பகுதியில் உள்ள பொது அமைப்புக்களைக் கொண்ட கலந்துரையாடலொன்று நேற்றுக்காலை பூநகரி பிரதேச செயலர் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் புனர்வாழ்வு மறுசீரமைப்பு சிறைச்சாலை அமைச்சர் சந்திரசிறி கஜதீரவும் அமைச்சு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகள் பற்றி கேட்டறிந்த பின் அமைச்சர் உரையாற்றுகையில், உங்கள் வதிவிடமான பள்ளிக்குடா கிராமம் பூநகரி முன்மாதிரியான கிராமமாக தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் நானும் எனது அமைச்சின் அதிகாரிகளும் உங்களை நோக்கி வந்திருக்கிறோம். இக் கிராமத்தை இப் பிரதேசத்தில் முன்மாதிரியான கிராமம் ஆக்குவதற்கு அனைத்து நடவடிக்கை களையும் உங்களுடன் இணைந்து எடுப்போம் என்றார்.

தொடர்ந்து பேசுகையில், வீதி அபிவிருத்தி பற்றியோ பாடசாலைகள், சுகாதார சேவைகள் பற்றியோ நான் குறிப்பிடவில்லை. அவை வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகிறது. உங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உட னடியாக 50 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ஒரு இலட்சம் ரூபா மானியமாகவும் ஒரு இலட்சம் கடனாகவும் வழங்கவுள்ளோம். இக்கடனை 10 வருடத்தில் செலுத்தலாம். அதைவிட 150 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ஆடு, மாடு, கோழி வளர்ப்புக்கு வாழ்வாதார கடன் வழங்கவுள்ளோம்.

விளையாட்டுமைதானம் வேண்டுமென கோரிக்கை விடப்பட்டது. உடனடியாக விளையாட்டு மைதானம் ஒன்று அமைத்து தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கடற்தொழிலாளர்கள் தமது பிரச்சினை சம்பந்தமாக கோரிக்கை விடுத்த போது அடுத்த தடவை நான் உங்கள்பகுதிக்குவரும்போது கடற்தொழில் பிரதி அமைச் சரை அழைத்து உங்கள் பிரச்சினைக்கு நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

எனது அமைச்சால் புனர்வாழ்வு அளிக்கப்பட் 600 பேர் இன்று விடுதலை செய்யப்படவுள்ளார்கள்.

இக் கலந்துரையாடலில் நூற்றுக்கு மேற்பட் பொது அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

(ஸ்ரீ-84)

# திறந்த பல்கலைக்கழக அறிவித்தல்கள்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் அடிப்படைச் சிங்கள கற்கைநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான பதிவுகள் மற்றும் மீள்பதிவுகளுக்கான இறுதித்திகதி எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை ஆகும். இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத மாணவர்கள் இறுதித் திகதிக்கு முன்னர் தங்களது பதிவுகளை மேற்கொள்ளுமாறு இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

❖ ❖ ❖ ❖ ❖

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் ஆங்கில சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இதற்கமைய 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம். இதற்கான விண்ணப்பப் படிவங்களை இன்று திங்கட்கிழமை பிறவுண்வீதி,கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.மேலதிக விபரங்களுக்கு யாழ்.பிராந்திய நிலைய அறிவித்தற் பலகையினை பார்வையிட முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 60 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 60 |
| தக்காளி | 40 | 50 | 30 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 60 | 40 |
| கோவா | 60 | 80 | 80 |
| கரட் | 60 | 80 | 60 |
| பூசணி | 25 | 40 | 25 |
| புடோல் | 35 | 40 | 35 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 180 | 160 | 150 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | 70 |
| பயற்றங்காய் | 170 | 140 | 100 |
| லீக்ஸ் | 60 | 60 | 50 |
| பீற்றூட் | -- | 60 | 80 |
| கறிமிளகாய் | 80 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 170 | 200 | 150 |
| போஞ்சி | 100 | 140 | 100 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | 20 |
| கீரை – 1 பிடி | 10-12 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 40 | 45 |

# இராசி பலன்

*04.07.2011*
*(ஆனி 19, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு*
*திருதியை முற்பகல் 11.22 மணி வரை*
*ஆயிலியம் முன்னிரவு 10.09மணிவரை*
*இராகுகாலம் 7.27-8.57 மணி வரை*
*சுபநேரம் 11.57-1.27மணிவரை*
*சுவாமி விவேகானந்தரின் நினைவு தினம், சதுர்த்தி விரதம்.*

**மேடம்** தொட்ட காரியம் வெற்றி பெறும், எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும், அழகு சாதனப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வீடு கட்டும் பணியில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** கடிதம் கனிந்த தகவலை தரும், வங்கிச் சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்,மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், வழக்குகள் சாதகமாக முடியும்.

**மிதுனம்** நாவன்மையால் நல்ல பெயரெடுக்கும் நாள், உத்தியோக அனுகூலமுண்டு, கடினமான வேலையைக் கூட நயமாகப் பேசி முடிப்பீர்கள், பயணங்களால் ஆதாயம் கிடைக்கும்.

**கடகம்** இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், பயணங்களின் மூலம் நல்ல செய்திகளைப் பெறுவீர்கள், நண்பர்கள் நல்ல யோசனைகளை சொல்லி நன்மதிப்பை பெறுவீர்கள்.

**சிங்கம்** மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள், விருந்தினர் வருகையால் கூடுதல் செலவுகள் ஏற்படலாம், வேலைச் சுமை அதிகரிக்கும், காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி** ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணை புரியும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும், நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம்.

**துலாம்** சொல்லை செயலாக்கி காட்டும் நாள், குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த புது முயற்சிகள் வெற்றி தரும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**தனுசு** கடவுளை வழிபட்டு காரியங்களை தொடங்க வேண்டிய நாள், எதையும் ஒருமுறைக்கு பல முறை யோசித்துச் செய்வது நல்லது, பயணங்களில் விழிப்புணர்ச்சி தேவை.


**மகரம்** மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்து இணைவர், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள நடவடிக்கை எடுப்பீர்கள்.

**கும்பம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடையும் நாள், கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கலாம், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும்.

**மீனம்** மக்கட் செல்வங்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், வெளிநாட்டுத் தொடர்பு அனுகூலம் தரும், பாராட்டும் புகழும் கூடும், பூர்வ புண்ணிய கருமங்களில் நாட்டம் அதிகரிக்கும்.

வளவன்

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலயத்தில் கலையரங்கு திறப்பு



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் ஸ்ரீ புவனேஸ்வரி கலையரங்கம் புதிதாக புனரமைக்கப்பட்டு கடந்த முதலாம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் கா.ஆ. தியாகராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வேத மந்திரங்கள் முழங்க சபைத் தலைவர் கலையரங்கத்தைத் திறந்து வைத்தார்.

கலைத்துவம் மிக்க பல சிற்ப வேலைப்பாடுகளுடன் தென்னிந்திய சிற்பக்கலைஞரான புருஷோத்தமனின் கைவண்ணத்தில் இக் கலையரங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் முதலாவது சிறப்பு நிகழ்வாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனின் தெய்வீகப் பேருரை இடம்பெற்றது.

அத்துடன் பெருந்திருவிழா இடம்பெறும் காலங்களில் தினமும் இரவு 8 மணி தொடக்கம் 9 மணிவரை இக்கலையரங்கில் தெய்வீகப் பேருரைகள் இடம்பெறவுள்ளதாக ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை கல்லூரி மண்டபத்தில் அதிபர் வி.கே. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் விருந்தினர்களாக இசுறுபாய கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்வி பிரதம ஆணையாளர் திஸ்ஸ கேவவிதான மற்றும் கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்வி நிர்வாக கல்விப் பணிப்பாளர் டபிள்யூ.பி.ஆர். சில்வா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக கல்வியமைச்சின் தமிழ் பாடசாலை அபிவிருத்திக்கிளையின் கல்விப்பணிப்பாளர் எஸ்.முரளிதரன், முஸ்லிம்-பாடசாலை அபிவிருத்திக் கிளையின் கல்விப்பணிப்பாளர் சர்.தயூடீன், கல்வி அமைச்சின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் ஏ.எம். திலகரட்ண மற்றும் கல்வியமைச்சின் வடமாகாண அபிவிருத்தி அலகின் செயற்றிட்ட பணிப்பாளர் ஏ.எவ்.எம்.நபி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ)

# தேசிய மல்யுத்தப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் பெற்று சாதனை



(கரவெட்டி)

தேசிய ரீதியில் நடைபெற்ற மல்யுத்த போட்டியில் யாழ். மாவட்டத்தில் இருந்து பங்கேற்ற பருத்தித்துறை துள்ளுமீன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த அன்ரன் தேவராசா விஜய் அமிர்தராஜ் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தை பெற்றுள்ளார்.

இந்நிகழ்வு கடந்த மாதம் 11 ஆம் திகதி கொழும்பு றோறின் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்திலிருந்து வடமாகாணம் சார்பாக பங்குபற்றிய பருத்தித்துறை துள்ளுமீன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வீரரான அன்ரன் தேவராசா விஜய் அமிர்தராஜ் என்ற வீரரே இறுதிப் போட்டியில் பங்குபற்றி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தை தனதாக்கிக் கொண்டார்.

யாழ்.மாவட்டத்திலிருந்து மல்யுத்தப் போட்டியில் தேசிய மட்டத்தில் வெள்ளிப்பதக்கம் பெறுவது இதுவே முதல் தடவையாகும். (ஸ்ரீ-24)

# நவோதயா வார நிகழ்வுகள்

யா/வேலணை மத்திய கல்லூரியின் நவோதயா வாரம் கடந்த முதலாம் திகதி அரம்பமாகி எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் ஐந்தாம் நாள் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். இதில் சுற்றாடல் விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவகக்கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ப.ஆருரன், சிறப்பு விருந்தினர்களாக தீவக கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் பு.சிறீஸ்கந்தராசா, பாடசாலை அபிவிருத்திசபை உறுப்பினர் எஸ்.குகநேசகுகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

## யாழ்.செய்திகள்

# தரம்-5 மாணவர்களுக்கான வதிவிடச் செயலமர்வு

(காரைநகர்)

மாகாணக்கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட தரம் 05 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சைகளில் வலய ரீதியாக உயர்ந்த புள்ளிகளைப் பெற்ற முதல் ஐந்து மாணவர்களிற்கான இருநாள் விசேட வதிவிட செயலமர்வு எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் மு.இராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய ரீதியாக சாதனை படைக்கும் நோக்குடனேயே வடமாகாண 12 கல்வி வலயங்களைச் சேர்ந்த 60 மாணவர்கள் இச் செயலமர்வில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வலய ரீதியாக ஐந்து மாணவர்களுடன் தரம் 05 இல் கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுள்ளார். (ஸ்ரீ-246)

# போக்கறப்பில் மீள்குடியேறிய 10 குடும்பங்களுக்கு வீடுகள் கையளிப்பு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள போக்கறப்பு கிராம சேவையாளர் பிரிவில் மீள்குடியேறிய 10 குடும்பங்களுக்கு அந்தப் பகுதி இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட அரை நிரந்தர வீடுகள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்த வீடுகளை உரிமையாளர்களிடம் கையளித்துள்ளார்.

இந்நிகழ்வில் பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல்ஜி.ஏ சந்திரசிறி, யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க மற்றும் இராணுவ அதிகாரிகள், அரச அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ)

# மருதங்கேணி–பருத்தித்துறை வீதி நேற்று மக்கள் பாவனைக்கு திறப்பு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கில் நேற்றையதினம் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டதையடுத்து மருதங்கேணி பருத்தித்துறை வீதியானது மக்கள் போக்குவரத்திற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் வீதியானது பல வருடங்களாக மக்களின் போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டிருந்தது.

நேற்றைய தினம் கேவில் பகுதியிலிருந்து இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகள் பருத்துத்துறை டிப்போவில் இருந்து தமது சேவையை ஆரம்பித்தன.

இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, யாழ். கட்டளைத் தளபதி மகிந்த கத்துருசிங்க, யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபிணி வரதலிங்கம் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2-64)

# விலங்கு விசர் நோய் தடுப்பூசியேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள யாழ்.நகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய இன்று காலை 9மணி தொடக்கம் 11 மணிவரை கீரிப்பிள்ளையார் நாவலர் வீதியிலும், முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை பொன்னப்பா ஒழுங்கையிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.


அத்துடன் நாளை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை கின்னர் வீதியிலும்,


முற்பகல் 11.30 மணி தொடக்கம் 1.30 மணிவரை கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள பன்றிக்கோட்டு பிள்ளையார் கோவிலடியிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிதொடக்கம் 11 மணிவரை சிவன் வடக்கு வீதியில் அமைந்துள்ள பாலர் பாடசாலையிலும் வைத்து ஏற்றப்ப டவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)







காரைநகர் காரை மத்தி மேம்பாட்டுக் கழகத்தின் மாணவர் ஊக்குவிப்பு நிகழ்வு அண்மையில் யாழ்ரன் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைவர் ந.கிருஷ்ணபவன் தலைமை உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் விருந்தினர்கள், கழக உறுப்பினர்களுடன் பரிசுகள் பெற்ற மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)

# தனிநபர் வருமானத்தை அதிகரிப்பதற்கு கூட்டுறவுத்துறை பெரும் பங்களிப்பு

## ஜனாதிபதி தெரிவிப்பு



இலங்கையில் தனிநபர் வருமானத்தை 4 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் தொடக்கம் ஐயாயிரம் டொலர்கள் வரை அதிகரிக்கும் திட்டத்திற்கு கூட்டுறவுத்துறை பெரும் பங்களிப்பு செய்துள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிக்கின்றார்.

குருநாகலில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கூட்டுறவு துறையின் நூற்றாண்டு பூர்த்தி மற்றும் சர்வதேச கூட்டுறவு தினம் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு குருநாகல் வெலகெதர மைதானத்தில் இந்த வைபவம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் போது கூட்டுறவுத்துறை தொடர்பாக எழுதப்பட்டுள்ள 11 நூல்கள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன. அத்துடன் கூட்டுறவுத்துறையால் முன்னெடுக்கப்பட்டுள்ள 100 வீடுகள் நிர்மாணிக்கும் திட்டத்தின் கீழ் 19 வீடுகளை ஜனாதிபதி பயனாளிகளிடம் உத்தியோக பூர்வமாக கையளித்த அதே வேளை மஹிந்த சிந்தனையில் ஏற்றுக் கொண்ட கொள்கையின் பிரகாரம் கடன்கள் இரத்துச் செய்யப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

கடனை பெற்றால் அதனை திருப்பி செலுத்த வேண்டும் என தெரிவித்த ஜனாதிபதி கடன் சுமையில் இருந்து மீள்வதற்கு வசதியாகவே ஒரு தடவை கடன் இரத்து செய்யப்பட்டு மீண்டும் கடன் வழங்கப்படுவதாக கூறினார்.

அதனை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ளாமல் மீண்டும்கடனை இரத்துச் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டால் அது குறித்து இரண்டு முறை சிந்திக்க நேரிடும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

கூட்டுறவுத்துறையினர் மற்றும் அமைச்சர்கள், தலைவர்கள், அத்தியட்சகர்கள் மாத்திரமின்றி கூட்டுறவு ஊழியர்கள் அனைவரும் எதிர்கால சந்ததியினருக்கு ஏற்ற வகையில் முன்னோக்கி செல்ல வேண்டியது அவசியம் என ஜனாதிபதி மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# கோத்தபாய மீதான தாக்குதல் அறிக்கை சட்டமா அதிபரிடம் ஒப்படைப்பு

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது கடந்த 2007 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் முயற்சி குறித்த சகல அறிக்கைகளும் சட்ட மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த் தாக்குதல் முயற்சி குறித்த சகல விசாரணை அறிக்கைகளும் ஏற்கனவே சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இரகசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொழும்பு நீதிமன்றில் நடைபெற்ற விசாரணைகளின் போது இரகசிய பொலிஸார் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரையில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

சந்தேக நபர்களிடம் மிக விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதாக இரகசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய சந்தேக நபர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# இந்திய மீனவர்களின் ஊடுருவலை தடுப்பதற்கு விசேட திட்டம் நடைமுறை

## கரையோர பாதுகாப்பு திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசிப்பதை தடுப்பதற்கு விசேட திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தவுள்ளதாக கரையோர பாதுகாப்பு திணைக்களம் அறிவித்துள்ளது.

காங்கேசன்துறை கடற்பரப்பை மையமாகக் கொண்டு திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்துப் படகுகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் தயா தர்மப்பிரிய கூறியுள்ளார்.

இந்திய மீனவர்கள் சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசிப்பதை தடுப்பற்காக கடற்படையினரின் ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய குறிப்பிட்ட சில பகுதிகளில் கடற்படையினர் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் ஏனைய பிரதேசங்களில் கரையோரப்பாதுகாப்பு திணைக்களத்தினர் அந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக ரியர் அட்மிரல் தயா தர்மப்பிரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசிக்கும் இந்திய மீனவர்கள் உடனடியாக வெளியேற்றப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோதமாக பிரவேசிக்கும் இந்திய மீனவர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதால் இலங்கை மீனவர்கள் பாரிய பிரச்சினையை எதிர் நோக்கியுள்ளனர். (ஸ்ரீ-2)

# முன்னாள் பிரதம நீதியரசர் ஜனாதிபதி ஆலோசகராக நியமனம்?



முன்னாள்பிரதமநீதியரசர்அசோக டி சில்வா ஜனாதிபதியின் சிரேஷ்ட சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த நியமனம் நீதித்துறைவட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அசோக டி சில்வா என்ன அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டார். எவ்வாறான பணிகளை மேற்கொள்ளப் போகின்றார் என்பது புரியாத புதிராகக் காணப்படுகின்றது என அரசியல் சிரேஷ்ட அரசியல் சாசன சட்டத் தரணி ஆர்.கே.டபிள்யூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களம் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கி வருவதாகவும் இவ்வாறான ஓர் நிலையில் ஜனாதிபதியின் சிரேஷ்ட சட்ட ஆலோசகராக அசோக டி சில்வா நியமிக்கப்பட்டமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கு நட்பாகச் செயற்படும் தனிப்பட்ட நபர்களே ஜனாதிபதியின் ஆலோசகர் பொறுப்புக்களுக்காக நியமிக்கப்படுவதாக பொதுவான கருத்து நிலவிவருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஓய்வின்பின்னர்ஆலோசகர் பொறுப்பு வழங்கப்படுவதில் தவறில்லை என்ற போதிலும் ஜனாதிபதியின் ஆலோசகர் பதவிகள் அரசியல் நியமனங்களாக கருதப்படுவதனால் அவ்வாறான ஒரு பொறுப்பினை முன்னாள் பிரதம நீதியரசர் ஏற்றுக் கொள்வது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (ஸ்ரீ-4)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### இன்று நான்காம் திருவிழா

## அருள் தருவாய் அம்மா

நயினையிலே வீற்றிருந்து நம்பிவரும் பக்தரை
நலமுடனே காத்திடுவாய்
தேம்பியழும் பக்தர்தனை தேற்றியே
வாழ வழி சொல்லிடம்மா

கடலன்னை தாயவளாய் அருள்பாலித்து
பாம்பினிலே பள்ளி கொண்ட நாகம்மா
பாவங்களை நீக்கியே என்றும்
பக்தரை பக்குவமாய் காத்திடம்மா.

*ரேகா*
*மாசியப்பிட்டி*

## நலம் தருவாய் நயினை தாயே!

இடர்வரினும் நாகநிழல் உடனிருந்து அருளும்
திடல்போன்று வெண்மணலில் திக்கெட்டும்– சுடரொளியாய்
நாகபூசணி அம்மன் நயினை பதிபுலர
மேகமது குடைபிடிக்கும் மேன்மை!

வடிவார்ந்த கோபுரமும் விடிபொழுதில் மணியொலியும்
கொடியேறும் காட்சியுடன்– கொலுவிருக்கும் படியேறி!
கரம் சுவப்பி மடியிருக்கும் கற்பூரம் தட்டிலிட்டு
வரம் கேட்க வா!

*அல்வையூர் கே.ஆர்.திருத்துவராசா*

## காக்கும் பெருமாட்டி நயினை நாயகியே!

கூப்புங் கரங்கொண்டு
உனைப் போற்றி நிற்றல் குறைபடாமல்
மூப்பும் பிணியும்
எனை வந்து சேரமுன் நீயருள்வாய்
நாப்பன் இசைக்கும்
அடியார் நடுவுன் அமர்ந்திருக்கும்
காக்கும் கருணைப் பெருமாட்டி
நயினை நாயகியே!

*கவிமணி கந்தமுருகேசதாசனார்*

## ஓடியே வந்திடம்மா

எட்டடிப் பாட்டினிலே– உன்னை
எப்படிப் போற்றிடுவேன்
திக்கெட்டும் காப்பவளே
கைக் கெட்டாக் கனியாகி–எம்
கனவெல்லாம் கலைந்து ஏன்
கடல் தாண்டாக் கலமாகி
காலமெல்லாம் ஓடுதம்மா
ஒளி காட்டி கரைசேர்க்க
ஓடியே வந்திடம்மா

*நடராசா– சந்திரலிங்கம்*
*அச்சுவேலி வடக்கு*




# தரமற்ற பெற்றோலினால் வாகனங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு நட்டஈடு

## அமைச்சர் சுசில்பிரேமஜயந்த அறிவிப்பு

(கொழும்பு)

தரமற்ற பெற்றோலினால் வாகனங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு நட்டஈடு வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தரமற்ற பெற்றோலினை பயன்படுத்திய சில வாகனங்கள் பழுதடைந்துள்ளதாகவும் அவ்வாறு பாதிக்கப்பட்ட வாகனங்களுக்கு நட்டஈடு வழங்க தயார் என அமைச்சர் சுசில் பிறேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மாசடைந்த பெற்றோலைப் பயன் டுத்தி வாகனங்க்ளுக்கு சேதம் ஏற்பட்டவர்கள் இது குறித்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் முறைப்பாடு செய்ய முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெற்றோலியப் பொருட்களினால் வாகனத்தின் என்ஜினுக்கு சேதம் ஏறப்பட்டுள்ளது. என்பது பரிசோதனைகளின் மூலம் நிரூபிக்கப்பட்டால் உரிய நட்டஈட்டுத் தொகை வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் விநியோகம் செய்யப்பட்ட ஒரு தொகுதி பெற்றோல் உரிய தரத்தில் இருக்கவில்லை என்பதனை அமைச்சர் ஒப்புக் கொண்டுள்ளார்.

மாசடைந்த பெற்றோலைப் பயன்படுத்திய சில வாகனங்களின் என்ஜின் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளதாகவும் சில வாகனங்களின் என்ஜின்களை பழுது பார்ப்பதற்கு ஒரு இலட்சம் ரூபா செலவாகும் எனவும் மோட்டார் வாகன பொறியியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஶ்ரீ-2)



## மடுத்திருவிழாவில் பல இலட்சம் பெறுமதியான நகைகள் கொள்ளை

### சந்தேகத்தின் பேரில் ஐவர் கைது

(கொழும்பு)

மன்னார் மடு மாதா திருவிழாவின் போது பெண் பக்தர்கள் அணிந்திருந்த பல இலட்சம் ரூபாய் பெறுமதி வாய்ந்த நகைகள் களவாடப்பட்டுள்ளதாக மடு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மடு திருவிழாவின் போது ஆலய நிர்வாகத்தினரால் திருடர்கள் அதிகம் காணப்படுவதாகவும் உங்களின் உடமைகளைப் பாதுகாக்குமாறும் பக்தர்களுக்கு அறிவிக்கப்பட்டருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக மடு பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் கேட்ட போது இச்சம்பவம் தொடர்பாக 5 பேரை கைது செய்துள்ளதாகவும் அதில் பெண்களும் அடங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஶ்ரீ-2)

## கட்டுநாயக்க தாக்குதலுக்குள்ளான ஊழியர்களின் மனித உரிமை மீறல்

(கொழும்பு)

தனியார் துறையினருக்கான ஓய்வூதிய சட்டமூலத்திற்கு எதிராக கட்டுநாயக்கவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போது பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக கூறி ஜே.வி.பி.யின் அனைத்து நிறுவனங்களின் ஊழியர் சங்கம் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

சட்டத்தரணி சுனில் வட்டகலவின் ஆலோசனையின் படி சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

பொலிஸாரின் தாக்குதலில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஊழியர்களுக்கு ஏற்பட்ட சேதம், தம்மால் இதுவரை தொழில் செய்ய முடியாமை மற்றும் தமது மனித உரிமை மீறப்பட்டமைக்கு எதிராக 22 ஊழியர்கள் கொடுத்துள்ள முறைப்பாடுகளும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஶ்ரீ-2)

## முகாம்களில் வாழும் மக்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டும்

### மடுத்திருவிழாவில் மன்னார் ஆயர் பிரார்த்தனை

சிறைச்சாலைகளிலும் முகாம்களிலும் துன்புறும் மக்கள் விடுதலை பெறவும் நாட்டின் தலைவர்களுக்காவும் திருச்சபை தலைவர்களுக்காகவும் விசேடமாக வேண்டுவோம் என மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மறை மாவட்டத்தின் மடுத்திருப்பதி பெருவிழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தனது தலைமை உரையில் தெரிவிக்கையில்,

நாம் அனைவரும் இந்த தாயினுடைய மண்ணிலே ஒரு குடும்பமாக ஒன்று கூடியிருக்கின்றோம். இந்த வேளையிலே பல்வேறு மொழிகளை நாம் பேசி இருந்தாலும் பல்வேறு பின்னணிகளில் நாம் இருந்து வந்திருந்தாலும் நாம் அனைவரும் ஒரே மனத்தோடு ஒரே குடும்பமாக ஒன்று கூடியிருக்கின்றோம்.

இப்படிப்பட்ட நிகழ்வானது மடுத்திருத்தலத்தில் இடம்பெறுவது எமது நாடு முழுவதும் மக்கள் ஒற்றுமையாகவும் சகோதரத்துவமாகவும் வாழ்வதற்கு முன்மாதிரியாக அமைந்துள்ளது என்பது நம்பிக்கைக்குரியதாகும்.

இந்த வேளையிலே எமது நாட்டின் விடிவிற்காகவும் சமாதானத்திற்காகவும் அன்னையிடம் வேண்டிக் கொள்வோம். எம் நாட்டிலே பல்வேறு துன்பங்களுக்கு உட்பட்டவர்களாக இங்கு வந்திருப்பவர்களை நாம் நினைவு கூருகின்றோம்.

சிறைச்சாலைகளிலும் முகாம்களிலும் வாழ்ந்து வருபவர்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டும் என்றும் வேண்டுகிறோம். அதற்கு மேலாக எமது மக்கள் சுபீட்சமாக வாழ்வு வாழ வேண்டும் எனவும் குறிப்பாக எமது நாட்டை வழிநடத்துபவர்களுக்காகவும் சிறப்பாக திருப்பலி ஒப்புக் கொடுப்போம் என மன்னார் மறை மாவட்ட ஆயர் மேலும் தெரிவித்தார். (ஶ்ரீ-2)

## தரமற்ற உப்பு உற்பத்தி செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது

(கொழும்பு)

உப்பு உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பிலான சட்டங்களை கடுமையாக அமுல் படுத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்கமைய 15 வீதம் தொடக்கம் 30 வீதம் வரை அயடின் கலக்கப்படாத உப்பை உற்பத்தி செய்வோருக்கும் விற்பனை செய்வோருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

தற்போது சந்தையில் விற்பனை செய்யப்படும் அநேகமான உப்பு வகைகளில் அயடின் கலக்கப்படுவதில்லை என்பது தெரிய வந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இந்த நிலையில் அயடின் கலக்கப்பட்ட உப்பு பயன்பாடு 90 வீதத்தில் இருந்து வீழ்ச்சியடைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக உப்பு உற்பத்தியாளர்களுடன் அண்மையில் கலந்துரையாடப்பட்டதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சேறு கலக்கப்பட்ட அல்லது நிற மாற்றமடைந்த உப்பை கொள்வனவு செய்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இத்தகைய உப்பை உற்பத்தி செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதோடு நிறமாற்றமடைந்த உப்பு கழுவப்படுவதால் அதிலுள்ள அயடின் வெளியேறுவதாக அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

உற்பத்தி செய்யப்படும் உப்பு கட்டியொன்றின் அளவு 4.5 மில்லிமீற்றரை விட குறைவாக இருக்க வேண்டும் எனவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

உப்பில் கலந்திருக்க வேண்டிய சோடியம் குளோரைட்டின் அளவு 95 வீதமாகும். இந்த

வழக்குத் தாக்கல் செய்வதற்கான அதிகாரம் பொது சுகாதார பரிசோதர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

(ஶ்ரீ-4)

## கிளிநொச்சி மாவட்டத்தில் விளையாட்டுத்துறை அபிவிருத்தி

கிளிநொச்சி மாவட்டத்தின் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் விளையாட்டுத் துறையை வளமாக்குவதுடன் வடமாகாணத்துக்கான நவீன தரத்திலான விளையாட்டுப் பயிற்சி மையமொன்றை சுமார் 325 மில்லியன் ரூபாய் செலவில் அமைப்பது குறித்து இங்கு ஆராயப்பட்டது.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தின் பளை, பூநகரி , கண்டாவளை, கரைச்சி ஆகிய பிரதேசங்களில் தலா ஒவ்வொரு பிரதேச விளையாட்டு அரங்குகளை அமைப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட்த்தின் பிரதான விளையாட்டு அரங்குக்கான அடிக்கல் இந்த மாத இறுதியில் நாட்டுவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, நாடாளுமன்ற உறுப்பினரும் இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் தலைவருமான நாமல் ராஜபக்ஷ, நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஶ்ரீ-2)

## மிஹின் லங்கா விமான சேவை நிறுவனத்திற்கு 8 ஆயிரத்து 877 மில்லியன் ரூபா நட்டம்

(கொழும்பு)

மிஹின் லங்கா விமான சேவை நிறுவனம் கடந்த ஆண்டுகளில் 8 ஆயிரத்து 877 மில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் சேவை வழங்கி வரும் மிஹின் லங்கா நிறுவனம் இதுவரையில் எவ்வித இலாபத்தையும் ஈட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மிஹின் லங்கா நிறுவனம் 2007 ஆம் ஆண்டு 195 மில்லியன் ரூபாவினை தேறியே நட்டமடைந்துள்ளதாகவும் 2008 ஆம் ஆண்டில் இந்தத் தொகை 3ஆயிரத்து 161 மில்லியனாக உயர்வடைந்ததாகவும் 2009 ஆம் ஆண்டு 4ஆயிரத்து 300 மில்லியன் ரூபா தேறிய நட்டம் பதிவானதாகவும் 2010 ஆம் ஆண்டில் ஆயிரத்து 221 மில்லியன் ரூபா தேறிய நட்டம் பதிவானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் தகவல்களின் மூலம் இந்தப் புள்ளி விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (ஶ்ரீ-2)


## தமிழக சிறைகளிலிருந்த அனைத்து இலங்கை மீனவர்களும் விடுதலை


தமிழ் நாட்டில் சிறை வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்களின் இறுதிப் பகுதியினர் 10 பேரும் கடந்த முதலாம் திகதி விடுவிக்கப்பட்டதாக இலங்கை மீன்பிடித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்திய கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 52 மீனவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தமிழ்நாட்டை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் விடுவிக்கப்பட்ட அனைத்து மீனவர்களும் தங்களது படகுகளுடன் இலங்கை வந்தடைவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)





வடமாகாண முன்பள்ளி ஆசிரியர்களின் நியமனம் தொடர்பான நிகழ்வு நேற்று முன்தினம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் அமைச்சர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட முன்பள்ளி ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்.)

# இலங்கையில் ஆளில்லா விமானங்கள் தயாரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஆளில்லா விமானங்கள் தயாரிக்கப்பட உள்ளதாக சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கை இராணுவத்தினரும் மொரட்டுவ பல்கலைக் கழகத்தினரும் கூட்டாக இணைந்து குறித்த விமானம் தயாரிக்கும் திட்டத்தை ஆரம்பித் துள்ளனர்.

ஆளில்லா விமானம் மற்றும் கண்ணி வெடி அகற்றும் இயந்திரம் ஆகியன அறி முகப்படுத்தப்பட உள்ளன.

ஏற்கனவே ஆளில்லா விமானமொன்று தயாரிக்கப்பட்டு பரீட்சார்த்த முயற்சிகள் பூர்த் தியடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

அதிகளவு இராணுவத் தளபாடங்களை உற்பத்தி செய்து அவற்றை பிராந்திய வலய நாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு உத் தேசிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இலங்கை தொடர்பான விவாதம்

பிரித்தானியா நாடாளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான பிரே ரணை விரைவில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

கொன்சவேட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்கோட்டின் தகவல்படி இன்னும் விவாதத்துக்கான உறுதிப்படுத்தப்பட்ட திகதி குறிக்கப்படவில்லை.

இலங்கையில் சமாதானத்யையும் நீதியை யும் நிலைநாட்டுவது தொடர்பிலேயே இந்த விவாதம் இடம்பெறவுள்ளது.

இந்தப்பிரேரணை 52 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் இலங்கை தொடர்பில் பரிந்துரைத்துள்ள போர்க்குற்றம் தொடர்பில் சுயாதீன விசார ணையை மேற்கொள்ளல் தொடர்பான பிரே ரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த பிரேரணைக்கு தொழில் கட்சியும் ஆதரவளித்து வருகிறது. (ஸ்ரீ-4)

# தரம் குறைந்த பெற்றோல் இறக்குமதி தொடர்பில் விசாரணை நடத்தவேண்டும்

## ஐ.தே.க. கோரிக்கை

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் விநி யோகிக்கப்பட்ட பெற்றோல் தொடர்பில் தோன் றியுள்ள பிரச்சினைகள் குறித்து மக்களை திசைதிருப்பும் கருத்துக்களை கூறாது உடன டியாக விசாரணை நடத்தி பொறுப்புக் கூறவே ண்டியவர்களுக்கு தண்டனை வழங்குமாறு அரசாங்கத்திடம் ஐக்கிய தேசியக் கட்சி கோரி க்கை விடுத்துள்ளது.

விலைமனு கோரல் நடைமுறைக்கு புறம் பாக எரிபொருள் கொண்டுவரப்பட்டதன் கார ணமாக இந்த பாரதூரமான நிலைமை தோன் றியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குறிப் பிடுகின்றது.

இந்த விடயம் குறித்து பெற்றோலிய தொழிற் துறை அமைச்சர் மற்றும் அமைச்சின் செய லாளர் ஆகியோர் எந்தவிதமான கருத்துக் களைக் வெளியிட்ட போதிலிலும் வாடிக்கை யாளர்களும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களும் கடும் பாதிப்பினை எதிர் நோக்கியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட் டுள்ளது.

கடந்த மாதம் 17 ஆம் திகதியன்று இறக்கு மதி செய் யப்பட்ட இருபதாயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் எரிபொருள் நிலையங்க ளுக்கு விநியோகிக்கப்பட்டதையடுத்து இந்த பிரச்சினை தோன்றியுள்ளதாக அந்த அறிக் கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை உரிய நடைமுறைகளைப் பின்பற்றாது தரத்தில் குறைந்த பெற்றோல் இறக்குமதி செய்யப்பட்டிருப்பின் பொறுப்புக் கூற வேண்டிவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாக அறிக்கையொன் றின் மூலம் பெற்றோலிய தொழிற்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறியுள்ளார்.

எனினும் தற்போது மேற்கொள்ளப்பட் டுள்ள இரசாயன ஆய்வுகூட பரிசோதனை களின் பிரகாரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ள பெற்றோல் உரிய தரத்தினை கொண்டதாகும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சர்ச்சை தொடர்பாக ஊடகங்க ளுக்கு கருத்து வெளியிட்ட பெற்றோலிய கூட்டுத் தாபன ஊழியர்கள் ஏழு பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக வெளியான தகவல் களை நிராகரிப்பதாகவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# வெளிநாடுகளிடம் ஜனாதிபதி ஒருபோதும் மண்டியிடமாட்டார்

## அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

போர்க்குற்றச்சாட்டுகள் உட்பட பாரதூரமான குற் றச்சாட்டுக்களை அடிப்படையாக வைத்து இலங்கையை அடிமைப்படுத்தி கொள்ள சில நாடுகள் முயற்சித்து வருகின்றன. எனினும் இந்தச் சதிகளுக்கு அடிபணிந்து அந்த நாடுகளிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒருபோதும் மண்டியிடமாட்டார் என பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேசத்தில் 20 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட பிரதேச செயலகக் கட்டடத்தை கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் செனவிரட்ன மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் ஆசியாவிலுள்ள மிகவும் அபி விருத்தி அடைந்த நாடுகளின் வரிசையில் இலங்கையை நிறுத்துவதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிர தான இலக்காக இருக்கிறது.

இந்த இலக்கை அடைவதற்காகவே ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுடன் மாத்திரமன்றி ஏனைய உலக நாடுகளுடனும் இணைந்து செயற்படு வருகின்றோம். எனினும் சில மேற்குலக நாடுகள் இலங்கையை மீண்டும் அடிமைப்படுத்தி தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சதித்திட்டம் தீட்டி வருகின்றன.

எவ்வாறாயினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்த நாடுகளிடம் ஒருபோதும் மண்டியிடமாட்டார். அதேவேளை போரினால் அழிவடைந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின் றன. 30 வருட யுத்தத்தால் இழந்துபோன அபிவிருத் தியை இந்தப் பகுதி மக்களுக்கு பெற்றுக்கொடுக்க அரசு உறுதி பூண்டுள்ளது என அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

(ஸ்ரீ-4)

# கலந்துரையாடல்

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு மாத்தாளோடை ஸ்ரீ கருமாரி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற் சவம் இன்று திங்கட்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன் கிழமை காலை 10.30 மணிக்கு அம்மன் தேரில் ஆரோ கணித்து வீதியுலா வருதலும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ஸ்ரீ-2-78)


# நெஞ்சை விட்டகலாத 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 1932.08.02



ஆண்டவன் அடியில் 2008.07.07

**அமரர் சின்னக்குட்டி -சுப்பிரமணியம்**

மூன்றாண்டு ஆனதையா விண்ணுலகம் நீர் சென்று
மறக்காத உம்வதனம் எம் விழிகளிலே நிழலாடுதையா!
நற்புத்திரப்பேறு பெற்று வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவரே!
எம்மையெல்லாம் சீரோடு வாழவைக்க அயராது உழைத்தீரே!
அனைவருக்கும் ஜெய் என்ற நாமம் சூட்டி ஜெயமாக வாழவைத்தீரே!
கல்வியிலும் சிறப்படைந்து வாழ்க்கையிலும் சிறப்படைந்தோம்
உங்கள் மலர்ந்த பூ முகம் காணவும் புன்னகை பூத்த மொழி கேட்கவும்
ஏங்கிறதே எம் உள்ளம் வெம்பித்துடிக்கிறதே தாய் மனம்
பக்தியின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய்
பார் போற்றும் உத்தமனாய் வாழ்ந்தும் அன்னையை தனிக்க விட்டு
எம்மையெல்லாம் தவிக்க விட்டு - சென்று
ஆண்டு மூன்றென்ன ஆயிரம்தான் சென்றாலும் ஆறாது நம் துயரம்
எப்படித்தான் குதூகலமாய் வாழ்ந்தாலும் உங்களோடு மகிழ்ந்திருக்கும்
காலத்தை தவற விட்டு தவியாய் தவிக்கின்றோம்
காலங்கள் கடந்தாலும் உங்களின் நினைவலைகள் எம்மை விட்டு நீங்காது!

**உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்**

2 ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(5467)

# வடமாகாண கல்வித் திணைக்களம் நடத்திய புலமைப்பரிசில் பரீட்சையில் முதலிடம் பெற்றோர்

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை மாதிரிப் பரீட்சைகளில் வலய ரீதியாக முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. அவை வருமாறு,

**யாழ்ப்பாணம்**

அ.சங்கீர்த் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), சு.மிருதி (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), க.லிதுர்சிகா (யாழ்.ஜோன் பொஸ்கோ), சூ.துவாரகன் (யாழ்.ஜோன் பொஸ்கோ), இ.கலைப்பருதி (யாழ்.உரும்பிராய் சைவத் தமிழ்)

**தீவகம்**

அ.பிரணவரூபன் (சுந்தரமூர்த்தி வித்தி), சு.புயலிசை (யாழ்ற்ரன் கல்லூரி), சு.விதுர்ஸன் (ஊரி அ.மி.த.க.பா),பா.சிவாஜினி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), சி.கீர்த்தனா (அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி)

**வலிகாமம்**

உ.சிறீத்தனா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), தி.காயத்திரி ( உடுவில் மகளிர் கல்லூரி),மோ.கயல்விழி (கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வித்தி),ச.கஜலக்ஷி (மானிப்பாய் விவேகானந்தா), ச.சசீரா(யாழ்ப்பாணக் கல்லூரி)

**வடமராட்சி**

பூ.நிதர்ஷன் (கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தி), இ.விவேகா(கரவெட்டி மாணிக்கவாசகர்),இ.துஷாகரன் (பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி), ஜெ.கஜீவன் (துன்னாலை காசிநாதர் வித்தி),சி.கதுர்ஜன் (கரணவாய் தாமோதரம் வித்தி)

**தென்மராட்சி**

க.கவினயா (மீசாலை வீரசிங்கம் ம.வி), கோ.ஹாருசன் (வரணி ம.வி),இ.ஆரசன் (கைதடி நுணாவில் அ.த.க.பா), த.அசோகன் (மீசாலை வீரசிங்கம் ம.வி),க.ஆதிகா (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை)

**கிளிநொச்சி**

பா.சிவேகா (தருமபுரம் அ.த.க.பா), இ.அபிஷன் (புனித திரேசா பெண்கள் கல்லூரி), ச.டர்ஷன் (பற்றிமா றோ.க.த.பா), தி.துவாரகா (புனித திரேசா பெண்கள் கல்லூரி),கு.தர்மிகா (உருத்திரபுரம் ம.வி)

**துணுக்காய்**

அ.சண்முகப்பிரியா (அனிஞ்சியன் குளம் தமிழ் வித்தி), பா.அஜிந்தன் (மல்லாவி மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலை),செ.சங்கவி (அனிஞ்சியன் குளம் தமிழ் வித்தி), மு.ஜனார்த்தனி(ஒட்டுசுட்டான் ம.வி),ப.கயூரங்கன் (யோகபுரம் ம.வி)

**முல்லைத்தீவு**

க.விதுர்ஷியா (விஸ்வமடு ம.வி), ஏ.டிருசன் (விஸ்வமடு ம.வி),வி.தட்சாயினி (முல்லைத்தீவு தண்ணீர் ஊற்று மகா வித்தி), பி.சரண்யா (முல்லைத்தீவு முள்ளியவளை தமிழ் வித்தி), கே.சானுஜா(விஸ்வமடு ம.வி)

**வவுனியா வடக்கு**

ரி.வதுர்சன் (புதுக்குளம் ம.வி), எஸ்.சிவகாமசுந்தரி (புதுக்குளம் ம.வி), ச.மதுசன் (தரணிக்குளம் கணேஸ் வித்தி), செ.கஸ்மிதா (கணேஸ் வித்தி), யோ.டிலக்சனா (புளியங்குளம் இந்துக் கல்லூரி)

**வவுனியா தெற்கு**

தி.சேதுப்பிரியன் (இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி), ஆ.துபவர்ஸனா (இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி),சி.பிரணவி (இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி), வ.கர்ஷன் (வவுனியா தமிழ் மகா வித்தி), சு.சர்மிகா (இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி)

**மன்னார்**

போ.அன்ரனிறினோயன் (மன்.சித்தி விநாயகர் இ.க),என்.அனுஜன் (மன்.புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி),சி.நேருஜன் (மன்.புனிதசவேரியார் ஆண்கள் கல்லூரி), கே. கரிகரன்( மன்.சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி),ஜே.அபிஷேக் (மன்.புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி)

**மடு**

அ.றொமேஷா (பெரியமடு மகா வித்தி), கி.மேரிமில்கா(பெரியமடு மகா வித்தி), செ.அமரந்தா (பெரிய பண்டிவிரிச்சான்), அ.குபேரன் (பரப்புக்கடந்தான் றோ.க.த.பா), மே.இவோன்ஸியா (கட்டை அடம்பன் றோ.க.த.பா). (ஶ்ரீ-246)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் கற்புலம் மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதில் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை மஞ்சத்திருவிழாவும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை கைலாய வாகனத்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

இதனைத்தொடர்ந்து எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை மாலை சப்பறத்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

(ஶ்ரீ-2)

# புதிய இராணுவத் தலைமையகத்துக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் சபையில் விவாதம்

(கொழும்பு)

இலங்கையில் புதிய இராணுவ தலைமையகத்தை அமைப்பதற்கான 20 பில்லியன் நிதி ஒதுக்கீட்டு திட்டம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் இடம்பெறவுள்ளது. இந்த விவாதம் நாளை மறுதினம் புதன்கிழமை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலி முகத்திடலில் உள்ள இராணுவ தலைமைய கட்டடத் தொகுதி மாலபே பகுதிக்கு கொண்டு செல்லப்படவுள்ளது. கொழும்பு நகரை அழகுபடுத்தும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் திட்டத்தின் கீழ் இந்த திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

இதேவேளை நாளைமறுதினம் புதன் கிழமை வடக்கு -கிழக்கில் இடம்பெற்று வரும் வன்முறைகள், இராணுவ அத்துமீறல்கள் தொடர்பில் நாடாளுமன்ற விவாதம் ஒன்றுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் அன்றையதினம் அவசர காலச் சட்டத்தை ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ஶ்ரீ-4)

# காலி முகத்திடலில் சீன ஆடம்பர விடுதி அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு காலிமுகத்திடலில் கடல்நிலத்தில் அமைக்கப்படவிருந்த சீன நாட்டின் ஆடம்பர விடுதி திட்டம் கைவிடப்பட்டுள்ளது. இந்த விடுதி 700 மில்லியன் டொலர் செலவில் அமைக்கப்படவிருந்தது.

அரசாங்க உயர்மட்ட உத்தரவின் பேரில் அமைச்சரவை இது தொடர்பில் மீளாய்வு செய்யும் வகையில் இந்தத் திட்டம் கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அமைச்சரவையின் மீளாய்வுக் குழுவே இதனை முன்கொண்டு செல்வதா, இல்லையா என்பதைத் தீர்மானிக்கும். எனினும் இந்தத் திட்டம் கைவிடப்பட்டமைக்கான காரணம் தெரியவரவில்லை.

கடந்த மேதினத்தன்று காலிமுகத்திடலில் ஜனாதிபதி உரையாற்றுகையில், இப்பாதிப்பு ஏற்படும் வகையில் நடவடிக்கைகள் ஏற்படக் கூடாது என தெரிவித்திருந்தார். இதனைக் கருத்திற்கொண்டே குறித்த சீன விடுதியமைக்கும் திட்டம் கைவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

எனினும் ஏற்கனவே கொழும்பு காலி முகத்திடலுக்கு முன்னால் அமைந்துள்ள இராணுவத் தலைமையகக் காணியில் சீன முதலீட்டுடன் நட்சத்திர விடுதி ஒன்று அமையவுள்ள நிலையில் கடல்நில விடுதியையும் அமைப்பது சீன நிறுவனங்களுக்கு வர்த்தக நோக்கில் நட்டத்தை ஏற்படுத்தும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே சீன நிறுவனங்களின் கோரிக்கையின் பேரிலேயே காலி முகத்திடல் கடல்நில விடுதித் திட்டம் கைவிடப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஶ்ரீ-4)

# கனகராயன் குளத்தில் பௌத்தவிகாரை நிர்மாணம்

கனகராயன் குளத்தில் சிறி சம்புத்தத்வ ரஜா மகா விகாரை எனும் பெயரில் பௌத்த விகாரை ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இங்கு ஏற்கனவே சிறிய புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டு வழிபாடுகள் இடம் பெற்று வரும் நிலையில் அவ்விடத்தில் கடந்த 27ஆம் திகதி திங்கட்கிழமை வெள்ளரச மரக்கன்றொன்றை நாட்டும் சம்பிரதாய நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

இப்பௌத்த விகாரையின் விகாராதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள வண.எட்டம்பகஸ்கட கல்யாண திஸாநாயக்க தேரரால் அநுராதபுரத்தில் இருந்து கொண்டு செல்லப்பட்ட இந்த வெள்ளரச மரக்கன்றை படைத்தரப்பின் வன்னிமாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சமேத பெரேராவால் நாட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் படைத்தரப்பின் 56 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் பிரியந்த நாபாகொட, 56-1 படைப் பிரிவின் தளபதி பிரிகேடியர் ரணவக்க மற்றும் படையதிகாரிகளும் கலந்து கொண்டுள்ளனர். (ந)

# தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளுக்கு ஓய்வூதியத் திட்டம்

தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு தமிழக அரசின் சமூக நல பாதுகாப்புத்துறை சார்பில் வழங்கப்பட்டு வரும் பல்வேறு ஓய்வூதிய திட்ட பலன்கள் வழங்கப்பட உள்ளன.

இலங்கையில் நடைபெற்ற போரின் போது தமிழகத்திற்கு அகதிகளாக சென்ற இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழர்கள் கௌரவத்துடன் வாழ தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் படி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடந்த மே மாதம் 30 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதன்படி இலங்கைத் தமிழர்களுக்கு தேவையான சுகாதாரம், கல்வி, இருப்பிடம், குடிநீர், மருத்துவம் உள்ளிட்ட வசதிகள் வழங்கப்பட உள்ளன. இலங்கைத் தமிழர்கள் படிப்பதற்கும் அவர்கள் வேலைவாய்ப்பு பெற தேவையான பயிற்சி வழங்கவும் முதலமைச்சர் உத்தரவிட்டார்.

மேலும் தமிழக அரசின் சமூக நல பாதுகாப்புத் துறை சார்பில் வழங்கப்படும் பல்வேறு ஓய்வூதிய திட்டங்களை இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கவும் முதலமைச்சர் உத்தரவிட்டார்.

இதன்படி முதியோர் ஓய்வூதியம், ஆதரவற்ற விதவை ஓய்வூதியத்தொகை, கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான உதவித் தொகை உள்ளிட்ட உதவித் தொகைகள் வழங்கப்பட உள்ளன.

இவர்களுக்கு தமிழகத்தில் மற்றவர்களுக்கு வழங்கப்படுவதைப் போல உதவித் தொகையாக ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. (ஶ்ரீ-4)

# இலங்கையின் கொலைக்களம் இந்திய ஊடகங்களில் காண்பிப்பு

(கொழும்பு)

கடந்த 2009 இல் வடக்குப் பகுதி தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட போரின் போது பாரிய போர்க்குற்றங்களைப் புரிந்ததாக இலங்கை இராணுவத்தின் மீது குற்றச்சாட்டு எழுந்தது.

இக்குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் வகையிலான காணொளி ஆதாரங்கள் வெளியாகி வந்துகொண்டிருக்கும் நிலையில் சனல்-4 இலங்கையின் கொலைக்களம் என்ற ஆவணப்படத்தை ஒளிபரப்பியது.

உலகெங்கிலும் அதிர்ச்சியலைகளை ஏற்படுத்திய இந்த ஆவணப்படம் தற்போது இந்திய ஆங்கில ஊடகமான ஹெட்லைன்ஸ் டுடேவிலும் எதிர்வரும் 7,8,9 ஆகிய திகதிகளில் ஒளிபரப்பப் போவதாக அறிவித்துள்ளது.

டில்லியில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் நெருக்கடிகளையும் மீறி தொலைக்காட்சியில் இந்த ஆவணப்படம் ஒளிபரப்பாகுமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்னும் நிலையில் இந்த ஆவணப்படம் ஒளிபரப்பாகும் நிலையில் ஏனைய ஆங்கிலத் தொலைக்காட்சிகளுக்கும் இலங்கையில் தமிழர் படுகொலை தொடர்பான செய்திகளை ஒளிபரப்பியாக வேண்டிய நெருக்கடி ஒன்று உருவாகும் என்றுதெரிகிறது. (ஶ்ரீ-2)

# கலாநிதி சோ.கிருஷ்ணராஜா நினைவுப் பேருரை-2011

07

## பல்வகைகள் ஒன்று சேர்தல்
## [Assemblage of Multiplicity]

**பேராசிரியர் சு.வித்தியானந்தன்**
*(1924-1990)*

பேராசிரியர் சு.வித்தியானந்தன், சுவாமி விபுலானந்தரின் மாணவர். சமகாலத்தவர் ஆயினும் சுவாமியிலும் 28வயது இளையவர். பேராசிரியர் வித்தியானந்தனின் சிந்தனை



கலாநிதி மௌனகுரு
யாழ் பல்கலைக்கழகம்

களிலும் செயற்பாடுகளிலும் பின்வரும் சேர்க்கைகள் ஒன்றிணைகின்றன.

1.அவரது வாழ்வும் குடும்பச் சூழலும் தனிப்பட்ட ஆளுமையும்

2.அவரது யாழ்ப்பாண வாழ்வு, பேராதனை பல்கலைக்கழக வாழ்வு, இங்கிலாந்து வாழ்வு

3.1940களில் தமிழகத்தில் உருவாகி வளர்ந்த பெரியாரின், அண்ணாத் துரையின் பகுத்தறிவுச்சிந்தனைகளும் திராவிட இயக்கப்போக்கும்

4.1950 களின் பின் ஈழத்தில் உருவான தமிழ்த்தேசிய உணர்வும் தமிழரசுக்கட்சியின் தாக்கமும்

5.யாழ்ப்பாணத்தையும் கொழும்பையும் மையமாகக் கொண்டிருந்த தமிழரசுக்கட்சி தனக்குள் திருமலை, மட்டக்களப்பு, மன்னார், வன்னி மலைநாடு முதலான பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களையும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களையும் இணைக்க முயன்றமை.

6.கிறிஸ்தவம், இந்து, இஸ்லாம் முதலான மதங்களையும் தமிழ்ப்பண்பாட்டுடன் இணைக்கும் போக்கு


7.அவரது பல்கலைக்கழக வாழ்வு, அங்கு தமிழ்ச் சங்கத் தலைமைத்துவம்,தமிழாராய்ச்சி மன்றத் தலைவர் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் தகைமை முதலியன

8.இலங்கைமுற்போக்கு எழுத்தாளர்சங்கம் மற்றும் எழுத்தாளர்களுடனான தொடர்பு

9.பொதுவுடைமையாளர்களின் தொடர்பு

இத்தனை பன்மைச் சேர்க்கைகளும் இணைய ஈழத்துத் தமிழ்த் தேசியப் பண்பாட்டை உருவாக்கும் ஆளுமைகளுள் ஒருவராகப் பேராசிரியர் வித்தியானந்தன் முகிழ்த்தார்.

திராவிட இயக்கச்சிந்தனைகள், தமிழ்த்தேசியச் சிந்தனைகள், ஈழத்து தமிழரசுக்கட்சியின் போக்குகள், ஈழத்தின் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் பிரதேச, மத பேதமின்றித் தமிழ்ப்பண்பாட்டு வட்டத்துள் இணைய வேண்டிய சூழல், கிராமத்தின் பண்பாட்டையும் தமிழ்ப்பண்பாட்டின் ஓர் அம்சமாகக் கொள்ளவேண்டிய சூழல், பொதுவுடைமைச் சித்தாந்தம் என்பனவற்றின் சேர்க்கையில் வித்தியானந்



சோ. கிருஷ்ணராஜா

### 19 ஆம் நூற்றாண்டின் பின் ஈழத்தமிழர் மத்தியில் உருவான கலை - இலக்கியப் போக்குகளை தெரிந்தெடுக்கப்பட்ட சிலருக்கூடாகப் புரிந்து கொள்ளல்

தனின் பொதுச்சிந்தனையும் செயன்முறையும் தோற்றம் கண்டது.

வித்தியானந்தன் பொதுவாகத் தமிழ்ப் பண்பாட்டின் பெருமைகளை வெளிக் கொணர்ந்தாராகினும்; அவரது சிந்தனைகளும், செயற்பாடுகளும் ஈழத்தமிழரின் பண்பாட்டிலேயே குவிமையம் கொண்டிருந்தது. கூத்தின் மீளுருவாக்கம், கூத்து நூற்பதிப்பு, நாட்டார் பாடல் தொகுப்பு எல்லாம் இவற்றின் பிரதிபலிப்பே.

ஒருவகையில் ஈழத் தமிழ்த்தேசியத்தை இந்தியத் தேசியத்தின் ஓர் அங்கமாகக் கொள்ளும் பண்பு இவரிற் குறைவாகவும் அதனைத் தனியாகக் காணும் பாங்கு மிகுந்தும் காணப் பட்டது. அத்தேசியத்தின் பண்பாட்டு அம்சத்தைப் பிரதேச,மத, சாதி வேறுபாடின்றி இணைக்க முயன்றார். மட்டக்களப்புக் கூத்தை ஈழத் தமிழரின் நாடக வடிவமாக்கியமையும் (கர்ணன்போர், இராவணேசன், செல்லையா அண்ணாவியார் அறிமுகம்) பறைமேளக் கூத்தைத் தமிழர் மரபாக அறிமுகம் செய்தமையும் (ஆனைக்குட்டி அறிமுகம்) முஸ்லிம் இலக்கியங்களையும் தமிழ்ப் பண்பாடாகக் கண்டமையும் (கலையும் பண்பும் பிறையன்பன்) இதன் வெளிப்பாடுகளே.

(தொடரும்)

# எமது சமூகத்தின் சமகால சவால்களும் கல்வியும்

07

**யாழ்/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர், பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை நினைவுப்பேருரை-2011**

**கல்வியின் புதிய....**

ஈ)தங்களதும் சக சமூகங்களினதும் எதிர்கால சந்ததியினரதும் நீடித்த செழிப்புக்கும் உறுதிப்பாட்டிற்கும் வழிசெய்யும் வகையில் இயற்கை வளங்கள், உற்பத்திச் சாதனங்கள், சுற்றுச் சூழல்காரணிகள் ஆகியவற்றை முகாமை செய்யக் கூடிய உரித்தாளுமை கொண்ட சமூகமாக (community with entitlement) உருவாக்குதல்.

இந்நான்கு தளங்களும் வழமையான முறைசார் கல்வியின் (Formal education)பரப்பெல்லைக்குள் அடக்கப்பட முடியாதவை. தற்போது நடைமுறையிலுள்ள கல்வித் திட்டமும் பாடவிதானங்களும் (Education scheme and curricula) அடிப்படையான கல்வியறிவை (Literacy) எல்லோருக்கும் கிடைக்கச் செய்யும் நோக்குடனும் பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு செயற்படும் சமூகங்களின் தேவையை நிறைவு செய்வதற்காகவும் தேசிய ரீதியாக வடிவமைக்கப்பட்டவை. சிறப்புத் தேவையுள்ள பிரதேசங்களையோ மக்களையோ (People or regions with special needs) கருத்திற்கொண்டு மாற்றங்களை உள்வாங்கப்படக் கூடியவையாக இவை தயாரிக்கப்படவில்லை.இவ்விடத்தில் அமெரிக்க சிக்காகோ பல்கலைக் கழகத்தில் சட்டத்துறைப் பேராசிரியராகவும் தத்துவம், அபிவிருத்தி சமூகவியல் ஆகிய துறைகளில் நன்கு அறியப்பட்ட சிந்தனையாளருமான மார்த்தா நேஸ்பாம் (Martha C.Nuss baum)அம்மையார் அண்மையில் தனது Not for Profit Why Democracy Needs the Humanities என்ற நூலில் குறிப்பிடுள்ளதனை தங்கள் கவனத்துக்குத் தர விரும்புகின்றேன்.

"தேசிய வருவாயில் அவாக் கொண்டுள்ள தேசங்கள், ஜனநாயகத்தின் உயிர்வாழ்வுக்கான அடிப்படைத் திறன்களைத் தமது கல்விமுறைமை கொண்டுள்ளதா என்பதில் அக்கறையற்றவர்களாகவே உள்ளனர். இந் நிலைமை தொடருமாயின் உலகிலுள்ள தேசங்கள் எல்லாம் தங்களின் மேல் அக்கறை கொள்ளக்கூடிய முழுமை கொண்ட குடிமக்களை, சக மனிதனின் துயரங்களையும் சாதனைகளையும் உணர்ந்து மதிப்பளிக்கக் கூடியவர்களை, உருவாக்குவதற்குப் பதிலாக விரைவில் உற்பத்திக்கு பயன்படக்கூடிய, இயந்திரங்களின் தலைமுறைகளை உருவாக்கி விடுவார்கள். உலகின் ஜனநாயகத்தின் எதிர்காலமே நூலிழையில் தொங்குகின்றது" என்று அவர் அபாயக் குரல் எழுப்புகிறார். ("Thirsty for national profit,nations,and their systems of education,are needlessly discarding skills that are needed to keep democracies alive.If this trend con tinues,nations all over the world will soon be producing generations of useful machines, rather than complete citizens who can think for them selves,criticize traditions,and understand the significance of another person`s Sufferings and achievements. the future of the World`s democracies hangs in the balance- Martha C.Nussbaum 2010p2)

எனது மதிப்புக்குரிய நண்பர்களே பெற்றோர்களே கல்வியாளர்களே!

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடக்குக் கிழக்கில் எம் மக்களது வாழ்க்கையினையும் அவர்களது பொருண்மியச் செழுமையினையும்

திருமதி-பிரேமாவதி செல்வின் இறேனியஸ்
மேலதிகமாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடமாகாணம்.

பாதுகாப்பான எதிர்காலத்தினையும் கட்டியெழுப்புவதற்கு நாம் கடுமையாக, மிகவும்கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. எமது கடும் உழைப்புடன் அரசாங்கத்தினதும் சர்வதேசங்களினதும் புலம்பெயர் சமூகத்தினதும் உதவிகளும் பலமும் இணையும் போது நாம் நினைத்தவாறு மீள் எழ முடியும்.

(தொடரும்)

# மற்றவர்களை தன்வசப்படுத்தி காரியங்களை சாதிக்கும் 6 ஆம் எண்ணில் பிறந்தவர்களே!

தங்களது சுய இலாபத்திற் காகவே அடுத்தவர்களுக்கு உதவி செய்வார்கள்.

எக்காரியமானாலும் நன்றாகச் சிந்தித்தே ஒரு முடிவுக்கு வருவார் கள். தேவையற்ற முயற்சிகளை எடுக்கத் தயங்குவார்கள். மந்திரங் கள், மாய தந்திரங்கள் ஆகியவ ற்றை அறிந்து கொண்டு அவற் றைக் காசாக்குவதில் வல்லவர்கள். இவர்கள் செல்வத்தைக் குவித்திடும் இலட்சுமியின் புத்திரர்கள் ஆவார் கள். மகிழ்ச்சியான குடும்ப வாழ்க் கையும் உண்டு. இன்பங்கள் அனு பவிப்பதில் சலிக்க மாட்டார்கள்.

அதற்கேற்றவாறு உடல் சக்தி யும் மிகுந்திருக்கும். இவர்களது உருவம் அழகாக இருப்பதால் பெண்களை எளிதில் கவர்ந்து விடுவார்கள். அவர்களும் இவர் களைப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்க மாட்டார்கள். இன்ப அனுபவங்களில் தீவிர ஈடுபாடு உண்டு. தலைமுதல் பாதம் வரை ஒரே சீராகவும் அழகாகவும் இருப்பார்கள். அழகான உடை மற்றும் வாசனைத் திரவியங்கள் மூலம் தங்களை மேலும் அழகு படுத்திக் கொள்வார்கள். தாங்கள் வசிக்கும் இடத்தினையும் மிகவும் அழகாக வைத்துக் கொள்வார்கள்.

காதல் விடயங்களில் அதிர்ஷ்ட மானவர்கள்.இவர்களுக்கு நல்ல அழகும் குணங்களும் கொண்ட கணவன்/மனைவி அமைவர். பொதுவாக இந்த எண்காரர்க ளுக்கு உணவு, உடை, வீடு ஆகிய வற்றில் குறைபாடுகள் வராது. வசதிகளை எப்படியும் உருவாக்கிக் கொள்வார்கள்! பலருக்கு பிறவி லேயே அமைந்திருக்கும்.

சினிமா, தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றில் பெரும் புகழ் பூத்த கலைஞர் களும் பேச்சாளர்களும் இவர் களே! இவர்கள் மற்றவர்களின் கலைத் திறமையைப் பாராட்டு வார்கள். பொறாமையும் பிடிவாத மும் உண்டு.

கீழ்த்தரமானவர்கள் (எண்பலம் மிகவும் குறைந்தவர்கள்) பிறரை ஏமாற்றியும் வஞ்சித்தும் பிழைப் பார்கள். கெட்ட வழிகளில் துணிந்து செல்வார்கள்.

தங்களை நம்பியவர்களைக் கூட ஏமாற்றுவார்கள். இவர்களது மனதில் அதிக காமமும் பணத்தா சையும் இருக்கும்.

இவர்களுக்கு குழந்தைப் பாக் கியம் நிறைய உண்டு. பெண் குழந்தைகள் அதிகம் உண்டு. பொதுவாக உலக கலைகளை அனுபவிக்கப் பிறந்தவர்கள் இவர் களே! இவர்களால் தான் உலகில் பழைய கலைகளும் இலக்கியங்களும் இன்னும் நிலை பெற்று உள்ளன.

### அதிர்ஷ்ட தினங்கள்

ஒவ்வொரு மாதத்திலும் 6,15,24 ஆகிய திகதிகளும் 9,18,27 ஆகிய திகதிகளும் மிக்க அதிர்ஷ்டமான வையே! கூட்டு எண் 6 மற்றும் 9 வரும் தினங்களும் நல்ல பலன்க ளையே கொடுக்கும்.

ஒவ்வொரு மாதத்திலும் 3,12,21 ஆகிய தினங்களும் கூட்டு எண் 3 வரும் தினங்களும் மிகவும் துர திர்ஷ்டமானவை. 5,14,23 திகதி களில் முக்கிய முடிவுகள் எடுக்கக் கூடாது. நடுத்தரமான பலன்களே கிடைக்கும்.

### அதிர்ஷ்ட நிறங்கள்

இவர்களுக்கு மிகவும் உகந்தது பச்சை, நீலம் மற்றும் இரண்டு கலந்த வண்ணங்கள்! இலேசான சிவப்பும் அதிர்ஷ்டத்தைக் கூட்டு விக்கும். வெள்ளை, ரோஸ், மஞ்சள் ஆகிய வண்ணங்களைத் தவிர்த்து விடவும்.

### அதிர்ஷ்ட இரத்தினங்கள்

இவர்களுக்கு மரகதமே (பச்சை என்பார்கள்) சிறந்தது. ஆங்கி லத்தில் EMERALD என்பார்கள். மேலும் AQUAMAIRNE,JADE, BERYL, PARIDOT, TURQUOISE (பச்சை நிறம் ) போன்ற இரத்தினக் கற்களும் அணிந்து வர யோகங்கள் பெருகும். AMETHYST (செவ்வந்திக்கல்) அணி யவே கூடாது.

### 6 ஆம் திகதி பிறந்தவர்கள்

எப்போதும் செல்வத்தில் திளைக்க வேண்டும் என்று விரும்புவார்கள். அதற்காகக் கடுமையாக உழைப் பார்கள். எவரையும் சரிக்கட்டி தங் கள் காரியத்தைச் சாதித்துக் கொள் வார்கள். பெண் தன்மையும் காணப் படும். எதிலும் மிகுந்த ஊக்கத் துடன் ஈடுபடுவார்கள்.

அடக்க சுபாவமும் ஆழ்ந்த சிந்தனைகளும் உண்டு. கலைகளில் (64 கலைகளில் ஏதாவது ஒன்று அல்லது சில) மிகுந்த ஈடுபாடு கொண்டிருப்பார்கள். இவர்கள் சாந்தமானவர்கள் தாம். கோபம் வந்தால் விசுவரூபமாகிவிடும். சுக்கிரனின் ஆதிக்கம் நிறைந்த வர்கள். சுகம் நிறைய அனுபவிப் பார்கள்.

### 15 ஆம் திகதி பிறந்தவர்கள்

மற்ற மக்களை வசீகரிக்கும் தன்மை இயற்கையிலேயே உண்டு. பேச்சுத் திறமையும் கவர்ச்சியும் உண்டு. கலைகளில் தேர்ச்சியும் நகைச்சுவைப் பேச்சும் உண்டு. எதிரியை எடைபோடுவதில் மிகவும் திறமையானவர்கள்.

ஆனால் எதிரிகளை எப்போதும் மறக்கமாட்டார்கள். பொறுமையு டன் காலம் பார்த்துப் பகையைத் தீர்த்துக் கொள்வார்கள். மனதிற் குள் கவலைகள் இருந்தாலும் அவற்றை வெளியில் காட்டிக் கொள்ளாமல் சமாளிப்பார்கள். நாடகம், சினிமா, டி.வி. போன்ற வற்றில் ஈடுபடுவார்கள். நல்ல புக ழும் அதிர்ஷ்டமும் தேடி வரும்.

### 24ஆம் திகதி பிறந்தவர்கள்

அரசாங்க ஆதரவு இவர்களுக்குக் கிடைக்கும். அடக்கமும் அமைதி யும் ஆனால் அழுத்தமும் நிறைந்த வர்கள்.

பெரிய இடத்துச் சம்பந்தமும் பெரும் பதவிகளும் தேடி வரும். மிகவும் துணிச்சல்காரர்கள். மற்றவர் கள் தயங்கும் காரியங்களை இவர் கள் ஏற்றுக் கொண்டு திறமையுடன் செய்து முடிப்பார்கள்.

எனவே விரைவிலேயே கிடைத்து விடும். சிலர் விளையாட்டில் மிகவும் சிறந்து விளங்குவார்கள். தமக்கென ஒரு கொள்கையை ஏற்படுத்திக் கொண்டு அதில் துணிந்து செல்வார்கள்.

கலையுலகிலும் அதிர்ஷ்டம் உண்டு. சிலருக்கு கர்வமும் ஏற் படும். தங்கள் கருத்துக்களை அடுத்த வர் மீது திணிப்பார்கள்.

பொதுவாக வாழ்க்கையில் அதிர்ஷ்டசாலிகள் என்றே கூற வேண்டும்.

### எண் 6க்கான (சுக்ரன்) தொழில்கள்

இவர்கள் கலைத் துறைக் காகவே பிறந்தவர்கள். கலையின் பல துறைகளிலும் ஈடுபடுவார்கள். சிற்பம், சித்திரம், சங்கீதம் போன்ற கவின் கலைகளில் வெற்றி பெறுவார்கள்.

சிலர் சட்ட நுணுக்கம் பேசி பணம் அதிகம் சம்பாதிக்கும் வக்கீல்களா கவும் மருத்துவர்களாகவும் இருப் பார்கள்.பெண்களின் அழகு சாத னங்கள் உற்பத்தி மிகவும் விற் பனை துறைகள் நன்கு அமையும்.

பட்டு மற்றும் துணி வியா பாரம், முத்து,பவளம்,வைர வியா பாரம் உகந்தவை. இசைக் கருவி களில் ஏதாவது ஒன்றில் நாட்டம் இருக்கும்.நளினமாக. நடித்து காண்பிக்கும் குணமும் உண்டு.

திரைப்படத் தொழில், ஒப்ப னைத் தொழில், காட்சி அமைப் புகள் தயார் செய்தல் போன்றவை யும் நன்கு அமையும்.


மதுபான வகைகள், நெல்லி, எலுமிச்சை, தானியங்கள், அரிசி, உப்பு, வாசனைப் பொருட்கள் வியாபாரம், உணவு விடுதி, தங்கும் விடுதிநடத்துதல்,ஜோதிடம் பார்த் தல்,பசு,பால், நெய்வியாபாரம், அழகு, தையல் நிலையங்கள், ஆண், பெண் அழகு நிலையங்களும் இவர் களுக்கு ஏற்றவை! Fashion Designing, Garment தொழில்களும் உகந் தவை.இயற்கையை ரசிப்பவர்கள், சிலர் மருத்துவ துறையிலும் பிரகாசிப்பார்கள். (தொடரும்)







பூநகரி பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீஸ்கந்தா முன்பள்ளி விளையாட்டுவிழா அண்மையில் முன்பள்ளி முன்றலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் இ.சின்னராசா உரை நிகழ்த்துவதையும் சிறுவர்களின் விளையாட்டு நிகழ்வையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-பூநகரி செய்தியாளர்)





துனுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தால் துனுக்காய் வலய பாடசாலை ஆசிரியர்களுக்கான "விசேட கல்விச் செயலமர்வு" அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆசிரிய ஆலோசகர் திருமதி சுகந்தினி சர்வேஸ்வரன் உரையாற்றுவதையும் அருகில் யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் அ.ரவீந்திரன், ஒட்டுசுட்டான் கோட்டக் கல்விப் பணிப்பாளர், ஆசிரியர் வளநிலைய முகாமையாளர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்:மல்லாவி செய்தியாளர்)*

## இந்திய இராணுவப் பயிற்சிக் கல்லூரிகளில் இலங்கை இராணுவத்தின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இந்தியாவின் இராணுவப் பயிற்சி அக்கடமி மற்றும் இராணுவக் கல்லூரிகளில் அனுமதிக்கப்படும் இலங்கை படைத்தரப்பினரின் எண்ணிக்கையை அதிகரிக்க இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் கடந்த மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமான இந்திய இலங்கை படைத்தரப்பு அதிகாரிகள் மட்டத்திலான மூன்று நாள் கலந்துரையாடலின்போதே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது என இந்தியப் படையதிகாரி ஒருவர் கூறியதாக ஹிந்துஸ்தான் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

அத்துடன் படைத்தரப்பின் நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் மனிதாபிமான அனர்த்த முகாமைத்துவ சேவைகளை வழங்குவது குறித்த தமது அனுபவங்களையும் இந்திய படையதிகாரிகள், இலங்கை படைத்தரப்பினருடன் பகிர்ந்து கொள்ளவுள்ளதாக இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

இவ்விரு நாடுகளது படைத் தரப்பின் பயிற்றுவிப்பாளர்களும் இரு நாட்டு இராணுவக் கல்லூரிகளுக்கு அனுப்பப்பட்டு படைத்தரப்பினரை பயிற்றுவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைப் படைத்தரப்பினருக்கு ஆங்கிலம் மற்றும் சாகச விளையாட்டு ஆகிய துறைகளில் பயிற்றுவிக்க படைத்தரப்புச் சார்ந்த பயிற்றுவிப்பாளர்கள் தேவைப்படுவதால் இப்பயிற்சி நெறிகளை வழங்க இந்தியா முன்வந்துள்ளது.

இக்கலந்துரையாடலில் இவ் விரு நாட்டு படைத்தரப்பினரும் பரஸ்பரம் தமது போர்முனை அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதுடன் கிளர்ச்சிகளைத் தடுப்பது குறித்தும் கலந்துரையாடியுள்ளனர். (நு)

## போலிச் சான்றிதழ் விரிவுரையாளர் கைது

(கொழும்பு)

இரத்மலானை கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக் பணியாற்றிய ஒருவர் குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்திய, பிரித்தானிய மற்றும் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களின் போலி சான்றிகழ்களை சமர்ப்பித்தே விரிவுரையாளர் பதவிகளைப் பெற்றுள்ளதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பொலிஸாரால் மொறட்டுவ நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்ட இவரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அவரால் சமர்ப்பிக்கப்பட்ட போலியான சான்றிதழ்கள் இன்ரர் போல் விசாரணைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கு பாரியளவில் தட்டுப்பாடு

### கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)



அரச பாடசாலைகளில் தமிழ் ஆசிரியர்களுக்கு பாரியளவில் தட்டுப்பாடு நிலவி வருவதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். அரச பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு நிலவிவரும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய அதிகளவு ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

72 பிரதேச சபைகளுக்குட்பட்ட பாடசாலைகளில் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர்கள் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

2011.07 04

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



★ 1054-சுப்பர்நோவா ஒன்று சீனர்களாலும் அரபுக்களாலும் அவதானிக்கப்பட்டது.

★ 1634-நியூ பிரான்சில் ட்ரோய்- ரிவியேரெஸ் நகரம் உருவாக்கப்பட்டது. இது பின்னர் கியூபெக் நகரமானது.

★ 1776-ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து ஐக்கிய அமெரிக்கா விடுதலையை அறிவித்தது.

★ 1803-லூசியானா விலைக்கு வாங்கப்பட்ட செய்தி அமெரிக்க மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

★ 1810-பிரெஞ்சுப் படைகள் ஆம்ஸ்டர்டாம் நகரைப் பிடித்தனர்.

★ 1865-ஆலிசின் அற்புத உலகம் வெளியிடப்பட்டது.

★ 1879-ஆங்கிலோ - சூலு போர் உலுண்டி என்ற இடத்தில் இடம்பெற்ற சமரின் பின்னர் முடிபுக்கு வந்தது.

★ 1918-ரஷ்யாவின் சார் மன்னன் இரண்டாம் நிக்கலாஸ் மற்றும் அவரது குடும்பத்தினர் போல் ஷெவிக்கினரால் கொல்லப்பட்டனர் (யூலியின் நாட்காட்டி)

★ 1941-நாசி ஜேர்மனியினரால் போலந்தில் லூவோவ் என்னும் இடத்தில் அறிவியலாளர்களும் எழுத்தாளர்களுமாக 45 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1946-381 ஆண்டு குடியேற்றவாதிகளின் ஆட்சியின் பின்னர் பிலிப்பைன்ஸ் ஐக்கிய அமெரிக்காவிடம் இருந்து விடுதலை அடைந்தது.

★ 1976-உகண்டாவில் பாலஸ்தீனத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட ஏர் பிரான்ஸ் விமானத்தில் இருந்த அனைவரையும் இஸ்ரேலிய கொமாண்டோப் படையினர் விடுவித்தனர்.

★ 1988-வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் முதல் தமிழ் மாநாடு பென்சில்வேனியாவில் இடம்பெற்றது.

★ 1997-நாசாவின் பாத் ஃபைண்டர் விண்கலம் செவ்வாய்க் கோளில் இறங்கியது.

★ 2006-டிஸ்கவரி விண்ணோடம் 18:37:55 UTC மணிக்கு விண்ணுக்கு ஏவப்பட்டது.

**பிறப்புக்கள்**

★ 1807-கரிபால்டி, நவீன இத்தாலியின் தந்தை (இ.1882)

★ 1872-கால்வின் கூலிட்ஜ், ஐக்கிய அமெரிக்காவின் 30 ஆவது குடியரசுத் தலைவர் (இ.1933)

★ 1898-குல்சாரிலால் நந்தா, இந்தியாவின் 2 ஆவது பிரதமர் (இ.1998)

**இறப்புக்கள்**

★ 1829-ஜோன் ஆடம்ஸ், ஐக்கிய அமெரிக்காவின் 2 ஆவது குடியரசுத் தலைவர் (பி.1735)

★ 1826-தோமஸ் ஜெஃவ்வர்சன், ஐக்கிய அமெரிக்காவின் 3 ஆவது குடியரசுத் தலைவர் (பி.1743)

★ 1831-ஜேம்ஸ் மன்ரோ, ஐக்கிய அமெரிக்காவின் 5 ஆவது குடியரசுத் தலைவர் (பி.1758)

★ 1902-சுவாமி விவேகானந்தர், இந்தியாவின் சமயத் தலைவர் (பி.1863)

★ 1934-மேரி கியூரி, நோபல் பரிசு பெற்ற அறிவியலாளர் (பி.1867)

**சிறப்பு நாள்**

★ ஐக்கிய அமெரிக்காவின்- சுதந்திர தினம் (1776)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்

"மருத்துவ விஞ்ஞானத்தில் முன் எப்போதும் இல்லாத அளவு எவ்வளவு தூரம் முன்னேறி விட்டோம். ஆனால், நோய்களும் நோயாளிகளும் குறைந்ததாக தெரியவில்லையே? எங்கே தவறு நிகழ்கிறது?"

இந்தப் பூமியில் 150 வருடங்களுக்கு முன்பு நீங்கள் வாழ்ந்திருந்தால். எந்த அளவு உடல் உழைப்பு கொடுத்திருப்பீர்களோ, அதில் நூற்

## ஆன்மீகம் 39

றில் ஒரு பங்குதான் இன்றைக்கு உழைக்கிறீர்கள். விஞ்ஞான வளர்ச்சியால் உங்கள் மூளைதான் அதிகம் வேலை செய்திருக்கிறதே தவிர, உங்கள் உடல் பயன்படுத்தப்படாமல் சோம்பிக்கிடக்கிறது. அப்புறம் அது எப்படி ஆரோக்கியமாக இருக்கும்? அன்றைக்கு 60 வயது மனிதன் செய்த வேலைகளைக்கூட இன்றைக்கு 20 வயது இளைஞனால் செய்ய முடியாது.

எனக்குப் பொதுவாகவே காட்டில் நடக்கப்பிடிக்கும். ஒரு நாளைக்கு 20-30 கிலோ மீட்டர் நடந்தால், நாளின் முடிவில் ஒரு கவளம் பழையசோறு கூட அமுதமாய் இருக்கும்.

ஒரு முறை, சிறு குழுவாக சிலர் காட்டுக்குள் நடந்தோம். விடாமல் மழை பெய்ததால், எங்களால் அடுப்பு முட்டிச் சமைக்க முடியவில்லை. காட்டினுள் வெகுதூரம் சென்று விட்டோம். அங்கு இராணுவத்தினர் கூடாரம் அடித்துதுத் தங்கியிருந்தனர். அங்கிருந்த அதிகாரி எங்களை வரவேற்று உணவு உபசரித்தார்.

"சில இரகசியக் கோப்புகளுடன் பயணம் செய்த இராணுவ ஹெலிகொப்டர் இந்தக் காட்டில் விழுந்து சிதறி விட்டது. ஹெலி கொப்டரை கண்டு பிடித்து அந்த இரகசியங்களை மீட்பதற்காக, ஆறு வாரங்களாக ஒவ்வொரு பகுதியாக நடந்து கொண்டு இருக்கிறோம். நீங்கள் எதற்காக வந்தீர்கள்?" என்று அவர் கேட்டார்.

"நடக்க ஆசையாக இருந்தது. சும்மா ஜாலியாக வந்தோம்" என்று நான் சொன்ன போது, பக்கத்தில் இருந்த சிப்பாயின் வாய் பிளந்தது.

"என்னது...! ஜாலியாக வந்தீர்களா? ஆறு வாரமாக நடந்து நடந்து எங்கள் கால்கள் எல்லாம் கொப்புளங்கள். நீங்கள் என்னவென்றால், ஜாலியாக நடப்பதாகச் சொல்கிறீர்கள்!"

இராணுவத்தில் போர் இல்லாத நாட்களிலும் வீரர்களுக்கு கடுமையான பயிற்சிகள் கொடுப்பதற்குக் காகாரணமே, அந்த அளவு இயங்கிக் கொண்டு இருந்தால்தான் உடல் திறனோடு செயல்படும் என்பதுதான்!

"வசதியாக வாழ்வதற்காகத் தானே மனிதன் பல விடயங்களைக் கண்டு பிடித்தான்? அவற்றைத் துறந்துவிட்டு, மறுபடி காட்டு

## ஆரோக்கியம் உடலின் இயல்பு

வாழ்க்கைக்கு எப்படிப் போக முடியும்?"

கிளப் ஒன்றில், உடல் சுருங்கிப் போன மனிதர் ஒருவர் லேசாக இருமிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

அவரிடம் ஒரு இளைஞன் வந்தான். "பெரியவரே! நீங்கள் அன்றாடம் 40 சிகரெட்டுக்களாவது பிடிக்கிறீர்கள். ஆறு கோப்பையாவது மது அருந்துகிறீர்கள் என்று கேள்விப்பட்டேன். அத்தனையும் தாண்டி, தள்ளாத வயதுவரை வாழ்ந்திருக்கிறீர்கள். எனக்கு நிறைய அறிவுரைகள் சொல்லும் என் அப்பாவிடம் உங்களை அறிமுகப்படுத்த விரும்புகிறேன். வருகிறீர்களா, தாத்தா?" என்றான்.

"தாத்தாவா? எனக்கு 20 வயதுதான் ஆகிறது, பிரதர்!" என்று பதில் வந்தது!

இப்படி 20 வயதுதிலேயே உங்கள் உடலுக்கு 60 வயதின் மூப்பு வரவேண்டுமா, யோசியுங்கள். இதேபோல் எல்லோரும் சோம்பியிருந்தால், சில தலைமுறைகள் கழிந்து முழுமையான உறுப்புக்கள் இருந்தாலும், உடல் ஊன முற்றுப் போய்விடும்.

"ஆரோக்கியமாக இருக்க என்னதான் வழி?"

ஒரு ஜூனியர் டாக்டர் தன் சீனியரை தேடிப் போனார். "என்னிடம் வந்துள்ள நோயாளி இடை விடாமல் வாந்தி எடுக்கிறார். எல்லாச் சோதனைகளும் செய்து பார்த்துவிட்டேன். என்ன நோய் என்றே புரியவில்லை" என்றார்.

"அவர் டென்னிஸ் ஆடுபவரா என்று விசாரி! ஆடாதவர் என்றால், தினம் ஒரு மணி நேரம் டென்னிஸ் பயிற்சி செய்யவேண்டும் என்று சொல்" என்றார் சீனியர்.

"ஆடுபகராக இருந்தால்....?"

"ஆறு மாதத்துக்கு டென்னிஸ் ஆடக்கூடாது என்று சொல்!" என்றார் சீனியர்.

இன்றைக்கு உடல் நலம் அப்படித்தான் இருக்கிறது. பலர் தேவைக்கு அதிகமாகத் வேலை செய்து உடம்பைக் கெடுத்துக் கொள்கிறார்கள். வேறு பலர் தேவையான அளவுகூட வேலை செய்யாமல், உடம்பைக் கெடுத்துக் கொள்கிறார்கள்.

ஆரோக்கியம் என்பது உருவாக்கப் படுவதில்லை. அதுதான் உடலின் அடிப்படை இயல்பு. அதை உணராமல், நோய்களை வரவேற்பது நாம் தான்.

உடம்பை ஒழுங்காகப் பயன்படத்தினாலே, நூற்றில் எண்பது நோயாளிகள் எளிதாகத் குணமாகி விடுவார்கள். மிச்சம் இருக்கும் இருபதில் பத்து நோயாளிகள் தங்கள் உணவுப் பழக்கத்தை சீராக்கித் கொண்டால், அவர்களை விட்டும் நோய்கள் விலகி விடும். ஒரு சமூகத்தில் நூற்றில் தொண்ணூறு பேர் இப்படி ஆரோக்கியமாக இருந்து விட்டால், மிச்சமுள்ள பத்துப்பேரின் நோய்களை வெகு சுலபமாகச் சமாளித்து விடலாம்.

இதயம், மூளை எதையுமே நீங்கள் முழுமையாகத் பயன்படுத்துவதில்லை. உடல், மனம் தவிர, உங்கள் உயிர்ச்சக்தியையும் முழுமையாகப் பயன்படுத்தத் தொடங்கினீர்கள் என்றால், உங்கள் வாழ்வில் பல அற்புதங்கள் நிகழும்.

உங்கள் உள்ளங்கையை ஒரு நாளைக்கு ஆயிரம் தடவை திறந்து முடினால் போதும்... ஒரே மாதத்தில் அந்தக் கை எத்தனை திறனுள்ளதாக மாறுகிறது என்று பார்ப்பீர்கள். அரை குறையாக மூச்சு விடாமல், முழுமையாகச் சுவாசிப்பதற்கு பிராணாயாமா பயின்று அந்தப் பழக்கமாக்கிக் கொண்டால், உங்கள் நுரையீரல்கள் இப்போது இருப்பதை விடப் பல மடங்கு சிறப்பாகச் செயல்ப்படுவதைக் கவனிப்பீர்கள்

தினந்தோறும் உடல், மனம், உயிர்ச்சக்தி இந்த மூன்றுக்கும் உரிய பயிற்சிகள் கொடுத்துப் பயன்படுத்தனீர்கள் என்றால், ஆரோக்கியமே உங்கள் வாழ்க்கையின் அமுதமான துணையாகும்!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# 04 தரமான இலக்கியங்களை எவ்வாறு அடையாளம் காண்பது?

எழுதுவதற்கும் அதைப்புத்தகமாக வெளியிடுவதற்கும் இடையில் நிறைய இடைவெளி இருப்பது எனக்குத் தெரியும். நிகோலோய் கோலொவ் என்ற ரஷ்ய எழுத்தாளர், தான் எழுதியதைப் படித்து திருப்தியடையாமல், அடிக்கடி எரித்துவிடுவார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், எனக்கு புத்தகத்தை வெளியிட வேண்டிய ஒரு கட்டாயம் இருந்தது. சமீபத்தில் பொஸ்டனில் ஒரு புத்தகக் கடையில் பெண்மணி ஒருத்தர் புத்தகம் எழுதிய ஆசிரியரின் வயதை உறுதி செய்த பின்னரே புத்தகத்தை வாங்குவதைக் கண்டேன். ஏன் என்று கேட்டேன். புத்தகத்தை எழுதும்போது இருந்த ஆசிரியரின் வயதிலும் பார்க்க படிப்பவரின் வயது அதிகமாக இருக்க வேண்டும் என்றார்.

**அ.முத்துலிங்கம்**

இன்றைக்கு 'இஸங்கள்' குறித்த சர்ச்சைகள் தொடர்கின்றன. சிறுகதை, நாவல் வடிவங்கள் மேனாட்டினரிடமிருந்து எமக்கு வரவாகியது போன்று, இந்த 'இஸங்களும்' வந்துள்ளன. இதனால் குழப்பங்களும் உண்டு.

வழக்கமாக என்ன நடக்கிறது என்றால், அறிமுகமானவர்களின் படைப்புக்களை மாத்திரம் வாசிப்பது என்ற பழக்கத்தை வழக்கமாக்கிக் கொண்டவர்களும் எம்மத்தியில் அநேகர்.

காரணம் புரியும்.

தரமாக இருக்கிறதோ தரமில்லையோ முகஸ்துதிக்காகவாவது ஏதாவது சொல்ல நேருமே என்பதற்காகவும் படிப்பது.

எழுத்து எப்படி ஒரு வகையில் பயிற்சியோ, அப்படித்தான் வாசிப்பும் ஒரு வகையில் பயிற்சி என்று ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறேன். தேர்ந்த ரஸனையுள்ள ஒரு வாசகர் (எழுத்தாளராகவும் இருக்கலாம்)

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

மற்றுமொரு வாசகருக்கு தான் சமீபத்தில் படித்துரசித்த ஒரு படைப்பைப் பற்றிய தகவலைச் சொல்வது இயல்பாகவே பழக்கத்தில் வருவது நன்று.

நான் சிறு வயதில் எனது பாட்டியிடம்தான் கதை கேட்டிருக்கிறேன். பாட்டி சிறந்த கதைசொல்லி வளர்த்த பிற்பாடுதான் அக்கதைகளில் யதார்த்தமும் நம்பகத்தன்மையற்ற கற்னாவாதமும் சோடிக்கப் படிருந்ததைப் புரிந்து கொண்டேன். ஆனால், பிற்காலத்தில் நானும் கதைகள் எழுதப் புறப்பட்ட போது பாட்டிதான் எனக்கு மானசீக குருவாக வாழ்ந்திருக்கிறார்கள் என்ற உண்மை புலப்பட்டது. இன்று கதை சொல்ல வேண்டிய பாட்டிமார் தொலைக்காட்சி சீரியல்களுக்குள் முழ்கிவிட்டார்கள். தழிழர் புலம் பெயர்ந்த நாடுகளில் பாட்டிமாரை எப்போது முதியோர் விடுதிக்கு அனுப்பலாம் என்ற யோசனைதான் அதிகம். பேரர்களுக்கு கதை சொல்ல இன்று பாட்டிமார் இல்லை. ஆனால், பாட்டிமாரின் வேலையை தற்போது

**முருகபூபதி-அவுஸ்திரேலியா**

கம்பியூட்டர் செய்கிறது.

இனையத் தளங்கள் பாட்டிமாரை மறக்கச் செய்துவிட்டன. அதனால் புதிய தலைமுறைக்கும் முதுமை வரும்போது இலக்கிய வடிவமும் மாறிவிடலாம். ஊடகமும் புதுக் கோலம் கொள்ளும்.

எனவே இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் விடுத்து நிகழ்காலப் புதுமைகளை இலக்கியத்தில் தேடுவதுதான் ஆறுதல்.

எல்லோருக்கும் தனித்தனியாகத் தெரிந்த உண்மைகளை ஏனோ-எல்லோருமே நேர் நின்று பார்க்கக் கூசுகிறோம். இந்தக் கூச்சம் கூடப் போலிக் கூச்சம்தான். நான் கண்டதை-அதாவது உலகத்தால் எனக்குக் காட்டப்பட்டதை, நான் கேட்டதை- அதாவது வாழ்க்கை எனக்குச் சொன்னதை நான் உலகத்துக்குத் திரும்பவும் காட்டுகிறேன்; அதையே உங்களிடம் திரும்பவும் சொல்கிறேன். அது அசிங்கமாக, அற்புதமாக, அது கேவலமாக- அல்லது அதுவே உயர்வாக, உன்னதமாக எப்படி இருந்த போதிலும் எனக்கென்னபழி? அல்லது புகழ்? அப்டிக் காட்டும் கருவியாய், கண்ணாடியாய், ஓவியமாய்,கேலிச் சித்திரமாய், சோக இசையாய், என் எழுத்து இருந்தது என்பதைத்தவிர, மற்றதெல்லாம் உங்களுடையதுதானே- அதாவது நம்முடையதுதானே!- இகழ்ச்சிக்குரியவன் நானா? நான் மட்டும்தனா?- உங்களுக்கு ஒன்றும் பங்கில்லையா?

**-ஜெயகாந்தன்**

(முற்றும்)

# அரசியல் தீர்வுத் திட்டமுனைப்புகளில் இந்திய வம்சாவளித் தமிழர்களையும் இணைக்க வேண்டும்

## பிரபாகணேசன் வலியுறுத்து

(கொழும்பு)

அரசியல் தீர்வுத் திட்ட முனைப்புக்களின் போது இந்திய வம்சாவளித் தமிழர்கள் உதாசீனம் செய்யப் படக் கூடாது என பாராளுமன்ற உறுப்பினர் பிரபாகணேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மொத்த தமிழர் சனத் தொகையில் இந்திய வம்சாவளித் தமிழர்கள் பெரும்பான்மை வகிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இனப்பிரச்சினை குறித்த பேச்சுவார்த்தைகளில் இந்திய வம்சாவளித் தமிழர்களின் பிரதி நிதித்துவம் இன்றியமையாதது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு- கிழக்கு தமிழர்களை விடவும் மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் அதிகளவு இந்திய வம்சாவளித் தமிழர்கள் வாழ்ந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிடம் மலையகத் தமிழர்கள் குறித்து எழுதிய கடிதத்திற்கு பதில் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் சந்தர்ப்பங்களில் வடக்கு- கிழக்கு தமிழ் மக்கள் பற்றி மட்டுமே கருத்திற்கொள்ளப் படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மொழிப் பிரச்சினை மற்றும் இந்தியாவிற்கான விசா பெற்றுக் கொள்ளல் ஆகிய பிரதான பிரச்சினைகளை இந்திய வம்சாவளித் தமிழர்கள் எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# ரிஷானா நபீக் விவகாரம்

# இலங்கை தூதுக்குழு சவுதி செல்கிறது

மரணதண்டனைக்கைதி ரிஷானா நபீக் மீது கருணை காட்டுமாறு சவுதி அரசாங்கத்தினை வலியுறுத்துவதற்காக இலங்கையிலிருந்து தூதுக் குழுவொன்று சவுதி செல்லவுள்ளது.

ரிஷானா நபீக்கின் விடுதலை தொடர்பில் 'ஆசிய ஆபிரிக்க சட்ட ஆலோசனை மாநாட்டுக்கு வருகை தந்திருந்த சவுதி அரேபிய தூதுக் குழுவிடம் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்துரையாடியுள்ளார். இதனையடுத்து அரசாங்கம் இந்தத் தூதுக்குழுவினை சவுதி அரேபியாவுக்கு அனுப்பத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவுதி அரசாங்கத்தின் நீதித்துறை அதிகாரத்தில் நிர்வாகத்துறை தலையிடாது என சவுதி தூதுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் ரிஷானா நபீக்கின் எஜமான்கள் இருவரும் அவரை மன்னித்து அவர்கள் கோரும் பணத்தினை செலுத்த ஏற்பட்டால் அதற்கு சவுதி அரசாங்கம் உதவி செய்யும் என அந்தத் தூதுக்குழு உறுதியளித்துள்ளது.

இதேவேளை ரிஷானா நபீக்கின் விடுதலை தொடர்பில் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துவருவதாக அதன் தலைவர் பசில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# பொலிஸ் சேவையில் முக்கிய மாற்றங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

பொலிஸாரின் ஆயுதங்களை களைவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை பொலிஸ் சேவையில் சில முக்கிய மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

விசேட ஆணையாளரின் கீழ் பொலிஸ் சேவையை வழிநடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த 1971 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் பொலிஸார் ஆயுதங்களைப்பயன்படுத்தவில்லை. ஜே.வி.பி.யினர் கிளர்ச்சிகளை மேற்கொண்டதன் பின்னரே பொலிஸார் ஆயுதங்களைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

பொலிஸாரின் ஆயுதங்களை மீளப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆயுதங்கள் முழுமையாக களையப்பட்டால் 13 ஆம் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரிகளை வழங்குவதில் சிக்கல் இருக்காது என சிரேஷ்ட அரசாங்க அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள் மத்தியில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆயுதங்களை எடுத்துச் செல்ல வேண்டிய அவசியமில்லை என அண்மையில் பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# வடக்கில் இரண்டு இலட்சம் பேர் இன்னும் மீள்குடியேற்றப்படவில்லை

## ஐ.நா.அகதிகள் முகவரகம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் சுமார் 2 இலட்சம் இடம் பெயர் மக்கள் இன்னமும் மீள் குடியேற்றப்படவில்லை என ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. நம்பகரமான தரவு மூலங்களின் அடிப்படையில் இந்த புள்ளி விபரத் தகவல் வெளியிடப்பட்டுள்ளதாக அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தின் அதிகாரி எலினா பெர்ட்டெரி தெரிவித்துள்ளார்.

புத்தளம் பிரதேசத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் மீள் குடியேற்றப்பட்டால் இந்த எண்ணிக்கை வெகுவாக வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் ஒரு இலட்சத்து இரண்டாயிரம் பேரும் புத்தளத்தில் 55 ஆயிரத்து 400 பேரும் வவுனியாவில் 37 ஆயிரம் பேரும் இன்னமும் மீள் குடியேற்றப்படவில்லை என சுட்டிக்காட்டப்படுகிறது.

மீள்குடியேறுவோருக்கு ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் தலா 25 ஆயிரம் ரூபா வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-4)


# மக்கள் வங்கியின் பொன்விழா-2011

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



மக்கள்வங்கிதனதுபொன்விழாவை01.07.2011 ஆம் திகதி பூர்த்தி செய்து கொள்வதையொட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மக்கள் வங்கியானது தனது பணியை 01.07.1961 ஆம் ஆண்டு கூட்டுறவுத்துறையின் அபிவிருத்தியையும், கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதையும் பிரதான நோக்கங்களாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் பாமர மக்களுக்கும் தனது சேவையைப் பரவலாக்கி அதன் பொருட்டு அடகுச் சேவையை முதன்முதல் வங்கிச் சேவையில் அறிமுகப்படுத்திச் சாதாரண மக்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்த பெருமைக்குரியதாகும்.

அரச வங்கியாக உள்ளதால் அரசின் பல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதில் முக்கிய பங்களிப்பை நல்கியுள்ளது. குறிப்பாக வட, கிழக்கு மாகாணத்தில் மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல வழிகளில் நேசக்கரம் நீட்டியுள்ளதை மக்கள் அறிவார்கள்.மக்கள் சேவையைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவதால் மக்கள் மதிப்பறிந்த வங்கி எனப் போற்றப்படுகின்றது. இவ்வங்கி மேன்மேலும் மக்களுக்குப் பல திட்டங்களைத் தீட்டி மாண்புறு சேவையாற்றி வளர்ச்சி பெற எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மக்கள் வங்கியில் கடமையாற்றும் சகல ஊழியர்களுக்கும் பொன்னான இந்நாளில் எனது மனம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

*திருமதி. இமெல்டா சுகுமார்,*
*அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலரும்,*
*யாழ்ப்பாண மாவட்டம்.*

## பொன் விழாக் காணும் மக்கள் வங்கி!



01.07.2011 ஆம் திகதி தனது ஐம்பதாண்டுச் சேவையை நிறைவு செய்து ஐம்பத்தோராம் ஆண்டில் காலடி வைக்கும் மக்கள் வங்கியின் மக்கள் பணியை எண்ணும் போது என் உள்ளம் இறும்பூதெய்கிறது.

கூட்டுறவு இயக்கங்கள், கிராமிய பொருளாதார அபிவிருத்தி, ஏழை மக்களின் சிறு தொழில் முயற்சிகளுக்கான உதவி முதலிய பல்வேறு துறைகளில் தடம் பதித்த அரச வங்கியான மக்கள் வங்கி, 1995 ஆம் ஆண்டுக் காலகட்டத்தில் யாழ்ப்பாண மக்கள் வறுமையின் கோரப் பிடியிலிருந்து மீண்டெழ தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கியதை இலகுவில் மறந்து விட முடியாது.

மக்களுக்காக, மக்கள் நலனுக்காக, மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசினால் அமைக்கப்பட்ட மக்கள் வங்கி அதனது ஆரம்பகாலமான 1961 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை தனது குறிக்கோளிலிருந்து விலகாமல் மக்கள் சேவையை மகேசன் சேவையாக மதித்துச் செயற்பட்டு வருவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். மக்கள் வங்கி என்றும் மக்களுக்குச் சேவையாற்றும் வங்கியாக மிளிர வேண்டும், வளர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

*திருமதி. யோ.பற்குணராசா,*
*மாநகர முதல்வர்,*
*யாழ்ப்பாணம்.*

(ஸ்ரீ-3642)



- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

20

JUNE 2011 TO NOVEMBER 2011

*தமிழ் மொழி மூலம்*

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
• வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
• ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
**MARUTHUR . A. HASSEN**
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.07.2011

## வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களில்

# அரச கரும மொழியான தமிழ்மொழி கையாளப்படுவதை அரசியலமைப்பில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது

சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் மற்றும் இரு இயக்குநர் சபை அங்கத்தவர்களால் (மனுதாரர்கள்) யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்தை யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் 17.11.2010 அன்று கூட்டுவதை தடுத்து நிறுத்துமாறு கோரி வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கும் (பிரதி வாதிகள்) எதிராக 15.11.2010 இல் ஆணையீட்டு எழுத்தாணைக்கான விண்ணப்பம் ஆங்கில மொழியில் தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி வழக்கு 30.11.2010 அன்று யாழ். மேல் நீதிமன்றத்தில் கூப்பிடப்பட்ட போது பிரதிவாதிகள் சார்பில் வட மாகாண சபை நிபுணத்துவ சட்ட ஆலோசகர் இ.த. விக்னராசா (இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதிபதி) ஆஜராகி அரசியலமைப்பின் நான்காம் அத்தியாயத்தின் 24 ஆம் உறுப்புரை அரசியலமைப்பின் 16 ஆவது திருத்தத்தின் தேவைப்பாட்டிற்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களின் மொழியான தமிழ்மொழியில் மனுதார்ர்கள் தமது மனுவை தாக்கல் செய்யாமையால் முதனிலையிலேயே மனுதாரர்களின் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென முதனிலை சட்ட ஆட்சேபனை எழுப்பி வாதிட்டார்.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி சு.பரமராஜா அவர்கள் 1990 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மாகாணங்களின் மேல் நீதிமன்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 8 (1) இன் பிரகாரம் அரசியலமைப்பின் நான்காம் அத்தியாயத்தின் (மொழியுரிமைகள்) ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளன அல்லது உடனடியாக மீறப்படவுள்ளன என்பதற்கு முதற்தோற்றமளவிலான சான்று உள்ளதென தோன்றியமையால் அவ்விடயத்தை தீர்மானிக்கப்படுவதற்கென உயர்நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தியிருந்தார்.

இலங்கை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு சமுகமளிக்குமாறு மனுதாரர்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் சட்டமா அதிபருக்கும் அறிவித்தல் அனுப்பியது. உயர்நீதிமன்ற நீதியரசர்களான நிமால் காமினி அமரதுங்க, சுரேஸ் சந்திரா , சத்தா ஹெட்டிகே ஆகியோரினால் இந்த விடயம் தொடர்பான விசாரணை 27/06/2011 அன்று நடைபெற்றபோது பிரதிவாதி கள் சார்பில் வடமாகாண சபை நிபுணத்துவ சட்ட ஆலோசகர் இ.த.விக்னராசா அவர்கள் ஆஜராகி பின்வருமாறு வாதுரைத்தார்.

இலங்கையில் நிலவிய சமூகங்களுக்கிடையிலான முரண்பாடுகளை தீர்த்து வைக்கும் கருவியாக அதிகாரப் பரவலை நோக்கமாகக் கொண்டு 1987 ஆம் ஆண்டில் அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தத்துடன் ஆரம்பிக்கப்பட்ட அர்த்தமுள்ள நடவடிக்கை 1988 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 16 ஆவது திருத்தத்துடன் பரிணாம வளர்ச்சி பெற்று, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வட மாகாண மேல் நீதிமன்றம் உட்பட நாட்டில் உள்ள அனைத்து மாகாண நீதிமன்றங்களின் நியாயாதிக்க எல்லைகள் பரந்து விரிவடைந்து செயற்படுவது அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வில் இலங்கை நீதித்துறை முன் உதாரணமாக மிளிர்வது போல அரசியலமைப்பின் அத்தியாயம் நாலில் பிரகடனப்படுத்தப்பட்ட மொழி உரிமைகள் அந்தஸ்து தொடர்பில் ஆராய்வது இன்றியமையாததும் மிகவும் பொருத்தமானதுமாகும்.

1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்பினுள் 1956 ஆம் ஆண்டின் அரச மொழிச் சட்டம் இணைக்கப்பட்டு சிங்கள மொழியானது அரச கரும மொழியாகவும் சட்டவாக்க மொழியாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது. 1958 ஆம் ஆண்டு தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் நிறைவேற்றப்பட்ட போதும் அது 1966 ஆம் ஆண்டு வரை ஒழுங்கு விதிகள் எதுவும் இயற்றப்படாமல் செயற்படுத்தப்படவில்லை. ''தமிழ் பேசும் மாகாணங்களில் தமிழை சம அந்தஸ்துடைய அரச கரும மொழிக்கு ஈடான முறையில்'' இந்த ஒழு ங்கு விதிகளாவன உருவாக்கும் விளைவை உடையனவாய்த் தமிழ் பேசும் மக்களால் ஏற்கத்தக்க விதத்திலும் அமைந்தன. இச் சட்டமும், ஒழுங்கு விதிகளும் அரியலமைப்பின் பாக மாக கருதப்படாது "கீழ்நிலை சட்டவாக்கமாகக் கருதப்பட வேண் டும்" என்று கொள்ளப்படுவதுடன் அரசியலமைப்புக்குள் கூட்டிணைக்கப்பட்டன.

1959 ஆம் ஆண்டு நீதிமன்ற அலுவல் மொழிச் சட்டம் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட போதும் 1961 ஆம் ஆண்டிலேயே நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் நீதி அமைச்சருக்கு சிங்கள மொழியை வாதுரைக்கும் பதிவேட்டுக்கும் ஆங்கிலத்திற்குப் பதிலாக எவ்வெவ் நீதிமன்றங்களில் உபயோகிக்கலாம் என்று தீர்மானிக்கும் தத்துவத்தை அளித்தது. தமிழ்மொழி உபயோகம் பற்றி எந்தவித குறிப்பும் கொடுக்கப்படவில்லை. இச்சட்டம் அரசியலமைப்பினுள் சேர்த்து எழுதப்படவில்லையாயினும் பிரிவு 11 சிங்கள மொழியினை எல்லா நீதிமன்றங்களினதும் நியாய சபைகளினதும் மொழியாக்கியது. எனினும் சட்ட வாக்க மன்றத்திற்கு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தொடர்பாக எய்தும் வகையில் உறுதியளிக்கின்றது. (தொடரும்)

# எதிர்ப்பு அரசியல் மூலம் உரிமைகளைப் பெறமுடியாது

## பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த நாட்டில் 30 வருடமாக இடம்பெற்ற யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்புட்டு கடந்த இரண்டு வருடமாக நீங்கள் நிம்மதியான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றார்கள். அதனையும் சில கட்சிகள் எதிர்ப்பு அரசியல் மூலம் குழப்புவதற்கு முயற்சிக்கின்றனர்.

எதிர்ப்பு அரசியல் மூலம் ஒருபோதும் உரிமைகளைப் பெறமுடியாது. இவ்வாறு சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இங்கு கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் 9 மாகாணங்கள் உள்ளது. ஆனால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மட் டுமே வேதனம் வழங்கும் இத்திட்டம் வடமாகாணத்திலேயே அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இங்கு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

நாட்டில் எந்தவொரு மாகாண சபையும் இவ்வாறான திட்டத்தை முன்னெடுக்கவில்லை. வேறு மாகாணங்கள் நிதிப்பற்றாக்குறை உள்ளது எனக் கூறி முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்கும் திட்டத்தைப் புறக்கணித்து வருகின்றன.

ஆனால் வடமாகாணத்தில் நீண்டகால யுத்தத்தின் பின்பு விடிவு கிடைத்துள்ளது. அந்த விடிவு நிரந்தரமாக்கப்படவேண்டும்.

இந்த மாகாணம் கல்வியில் உயர்வடைந்திருந்த மாகாணம். எத்தனையோ அறிஞர்களையும் கல்வியியலாளர்களையும் உருவாக்கிய மாவட்டமாக யாழ்.மாவட்டம் திகழ்கின்றது.

பண்பாடும், பாரம்பரியத்தையும் கட்டிக் காத்த மண் கடந்த 30 வருடமாக யுத்தத்தின் பிடியில் சிக்கி அழிவடைந்துள்ளது.

இந்த மாவட்டத்தில் வாழும் மக்களுக்கு பல தேவைகள் இன்னும் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது. மின்சாரம், நீர்விநியோகம், வீட்டுத்திட்ட உதவிகள் என எண்ணிலடங்காத தேவைகள் உள்ளன.

வெறுமனே அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டு இருப்பதன்மூலம் அடையப் போவது எதுவுமில்லை. நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் மூலம் எந்தவிதப் பிரச்சினைக்கும் தீர்வினைப் பெற்றுவிடமுடியாது. அதுமட்டுமன்றி தற்போதைய அரசாங்கத்திலும் எந்த வித மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை.

கிழக்கு மாகாண சபையில் இடம்பெற்ற தேர்தலில் 14 பிரதேச சபைகளையும் அரசாங்கமே வென்றது. இதன்மூலம் ஒவ்வொரு சபைக்கும் 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது அரசாங்கம். இதன்மூலம் தமது பிரதேச அபிவிருத்திகளை அந்தந்த பிரதேச சபைகளே முன்னெடுத்து வருகின்றன.

யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களாகிய நீங்கள் எவ்வளவோ இடர்களைச் சந்தித்துள்ளீர்கள். இளம் பருவத்தில் நீங்கள் அனுபவிக்க முடியாதவற்றை எதிர்கால சமுதாயம் அனுபவிக்கட்டும்.

உள்ளூராட்சித் தேர்தலில் அரசாங்கம் தோற்பதால் அரசாங்கத்திற்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை.

ஆனால் மக்கள் மீண்டும் அழிவு நிலைக்கு கொண்டு வரப்பட்டு விட்டார்கள் என்பது வெளிப்படையானது.

இங்கு எவ்வளவோ தேவைகள் உள்ளன. அவற்றைக் கட்டியெழுப்ப அரசாங்கத்துடன் அனைவரும் இணைந்து பாடுபடவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4-6)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கரவை தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய கரவருட பெருந்திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதில் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்களும் மாலையில் சமய நல்லறிஞரின் பேருரைகள் இடம் பெறும். (ஸ்ரீ)



வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கான சின்னஞ் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் பாடசாலை அதிபர் திருமதி தெ. நவரட்ணம் சிரேஷ்ட மாணவத் தலைவிக்கு சின்னஞ் சூட்டுவதையும் அருகில் பொறுப்பாசிரியர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: கரவெட்டி செய்தியாளர்)

## இந்தோனேசியாவில் எரிமலை வெடிப்பு

இந்தோனேசியாவின் சுலாவேஸி தீவில் உள்ள சோபுடன் மலையில் எரிமலை நேற்று அதிகாலை 6 மணியளவில் சீற்றத்துடன் வெடித்து சிதறியது.

இதனால் 5 ஆயிரம் மீற்றர் உயரத்திற்கு எரிமலை சாம்பல் பரவியது. எரிமலையை சுற்றியுள்ள 8 கிலோ மீற்றர் சுற்றளவில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

கடந்த2008 இல் இதே மலையில் வெடித்துச் சிதறிய எரிமலையால் அதிக புகை வெளியேற்றப்பட்டது. இருப்பினும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. தீவுகளை அதிகம் கொண்டுள்ள இந்தோனேசியாவில் 129 க்கும் மேற்பட்ட எரிமலைகள் உள்ளன. (ஸ்ரீ-2)

# ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா நடத்திய போரில் 2இலட்சத்து 25ஆயிரம் பேர் பலி

## 200 இலட்சம் கோடி சேதம்

ஈராக், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் அமெரிக்கா நடத்திய போரில் 2 இலட்சத்து 25 ஆயிரம் பேர் பலியாகினர். கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்காவில் உள்ள இரட்டைக் கோபுரங்கள் மற்றும் பென்டகன் இராணுவ தலைமையகம் மீது அல்கொய்தா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

இதைத் தொடர்ந்து தீவிரவாதிகளை வேட்டையாடும் நடவடிக்கையில் அமெரிக்கா இறங்கியது. அவர்கள் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், ஈராக், ஏமன் உள்ளிட்ட நாடுகளில் பதுங்கிருப்பது கண்டறியப்பட்டது. எனவே தீவிரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்கா இறங்கியது.

கடந்த பத்து ஆண்டுகளாக அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் இந்த நாடுகளில் தீவிரவாதிகளுக்கு எதிராக போரிட்டு வருகின்றன. இந்தப் போர்களினால் இதுவரை 2 இலட்சத்து 25 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். இந்த தகவலை அமெரிக்காவில் உள்ள பிரவுன் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா நடத்தி வரும் போர்கள் குறித்து இந்த பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வு நடத்தினார்கள். அதில் 2 இலட்சத்து 25 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். 3 இலட்சத்து 65 ஆயிரம் பேர் காயம் அடைந்துள்ளனர் என்ற திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளனர்.

இறந்தவர்களில் 31 ஆயிரத்து741பேர் இராணுவ வீரர்கள். அவர்களில் 6 ஆயிரம் பேர் அமெரிக்கர்கள் மற்றும் ஆயிரத்து 200 பேர் நட்பு நாடுகளின் படைவீரர்கள் ஆவர். இவர்கள் தவிர 9ஆயிரத்து 900 ஈராக்கியர்கள், 8 ஆயிரத்து 800 ஆப்கானிஸ்தானியர்கள், 3 ஆயிரத்து 500 பாகிஸ்தானியர்கள், 2 ஆயிரத்து 300 அமெரிக்க தனியார் நிறுவனத்தினர் அடங்குவர்.

சண்டையின் போது ஒரு இலட்சத்து 72 ஆயிரம் பொது மக்களும் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் ஈராக்கில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேரும் பாகிஸ்தானில் 35 ஆயிரம் பேரும் ஆப்கானிஸ்தானில் 12 ஆயிரம் பேரும் உயிரிழந்துள்ளனர்.

இத்தனை பேரை பலி கொடுத்தும் 20 ஆயிரம் முதல் 51 ஆயிரம் தீவிரவாதிகள் மட்டுமே அழிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் போர்க் காலத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற 168 நிருபர்களும் 266சமூக சேவை ஆர்வலர்களும் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்கா நடத்தி வரும் போரினால் ரூ.200 இலட்சம் கோடி சேதம் அடைந்துள்ளன. அதில் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் தான் அதிக அளவு பாதிக்கப்பட்டுள்ளது என்று தங்களது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)




## லிபியாவில் நிதிப்பற்றாக்குறை; கடனுதவி வழங்க கோரிக்கை

(பெங்காசி)

லிபியாவில் நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் வெளிநாட்டு நிறுவனங்கள் கடனுதவி அளிக்க வேண்டும் என அந்நாட்டு ஆட்சி மாற்றக் கவுன்சில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

லிபிய ஜனாதிபதி கடாபி அவரது மகன் சயீப் அல் இஸ்லாம் மற்றும் அரசு புலனாய்வுத்துறை அதிகாரிகள் மூவரையும் கைது செய்யும் படி சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கடந்த மூன்று நாட்களுக்கு முன் உத்தர விட்டது. இந்நிலையில் இவருக்கு எதிராக போரிட்டு வரும் கிளர்ச்சியாளர்களுக்கு தற்போது நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து தேசிய இடைக்கால் அரசின் பொருளாதார ஆலோசகர் மசன் ரமதான் கூறுகையில்,

நாட்டில் சம்பளம் கொடுக்க, இறக்குமதி செய்ய நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவில் மட்டும் 300 தொன் டொலர் அளவிற்கு லிபியாவின் நிதி ஆதாரங்கள் முடக்கப்பட்டுள்ளன. கடந்த மாதம் அரசு ஊழியர்களுக்கும் சம்பளம் வழங்கப்படவில்லை.

நாட்டின் கிழக்கில் மின்சாரம் கிடையாது என்றார். இதற்கிடையே தலைநகர் டிரிபோலியில் மலைப்பகுதியில் உள்ள பெர்பர் மலையின மக்களுக்கு பிரான்ஸ் நாடு விமானங்கள் மூலம் ஆயுதங்கள் வீசியதாக சர்ச்சை எழுந்துள்ளது. (ஸ்ரீ-2)

## சிரியாவில் ஹமா நகர ஆளுநர் திடீர் நீக்கம்

### புதிய புரட்சி வெடித்தது

(மான்)

சிரியாவில் ஜனாதிபதி பஷர்அல் அசாத்தை எதிர்த்து புதிதாக கிளர்ச்சியில் ஈடுபட்ட மக்கள் மீது அந்நாட்டுப் படைகள் நடத்திய தாக்குதலில் 28 பேர் பலியாகினர்.

மேலும் ஹமா நகரின் ஆளுநர் அகமத் கலேத் அப்துல் அசிஷ்ஷை ஜனாதிபதி அசாத் பதவி நீக்கம் செய்தார்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராக மக்கள் கிளர்ச்சியில் ஈடு பட்டுள்ளனர். இவர்களை எதிர்த்து அந் நாட்டுப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின் றன. இதற்கு பயந்து ஆயிரக்கணக்கானோர் அருகில் உள்ள துருக்கி நாட்டிற்குள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இந்நிலையில் புதிதாக சிரியா நாட்டில் அசாத்துக்கு எதிராக புரட்சி வெடித்துள்ளது. நாட்டின் மேற்கில் லெபனான் மற்றும் கிழக்கில் ஈராக்கையொட்டிய கிராம மக்கள், கடந்த வெள்ளிக்கிழமை புதிதாக புரட்சியில் ஈடுபட்டனர்.

தொழுகை முடித்து வெளியே வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கிளர்ச்சியாளர்கள் மீது அந்நாட்டுப் படைகள் தாக்குதலில் ஈடுபட்டன. இதில் 28 பேர் பலியாகினர். தொடர்ந்து நீடித்து வரும் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி தலைநகர் டமாஸ்கசில் நடக்கும் தேசிய பிரச்சினை தீர்வு மாநாட்டில் கலந்து கொள்வது என்று எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

ஹமா நகரில் புதிதாக புரட்சி வெடித்ததையடுத்து அந்நகர ஆளுநர் அஹமத் கலேத் அப்துல் அசிஷ்ஷை ஜனாதிபதி அசாத் நேற்று முன் தினம் திடீரென பதவி நீக்கம் செய்தார். (ஸ்ரீ-2)

## தாய்லாந்தில் பொதுத் தேர்தல்

தாய்லாந்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொதுத் தேர்தலில் பொது மக்கள் வாக்களித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. தாய்லாந்தின் ஆளும் கட்சியான ஜனநாயக கட்சிக்கும் பியூதாய் கட்சிக்கும் இடையில் கடுமையான போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் அபிஷிட் விஜ்ஜஜீவா ஜனநாயகக் கட்சிக்கு தலைமை வகிப்பதுடன் பியூதாய் கட்சிக்கு முன்னாள் பிரதமர் தக்ஷின் சின்வத்ராவின் சகோதரி யிங்லக் தலைமை வகிக்கின்றார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசமான வன்முறைகளினால் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாடு முழுவதிலும் வாக்குச் சாவடிகளில் பாதுகாப்பு கடமைகளுக்காக சுமார் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் பாதுகாப்புப் படையினர் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு அரசாங்கத்திற்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தின் போது 91 பேர் கொல்லப்பட்டிருந்தனர். தாய்லாந்தில் நிலவி வரும் அரசியல் ஸ்திரமற்ற தன்மைக்கு தீர்வு காணும் வகையில் இந்தத் தேர்தல் முடிவுகள் அமையும் என அரசியல் விமர்சகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

500 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக நடத்தப்படும் இந்தத் தேர்தலில் 47 மில்லியன் மக்கள் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுக் கொண்டுள்ளனர். 40 கட்சிகளைச் சேர்ந்த 3 ஆயிரத்து 832 வேட்பாளர்கள் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். (ஸ்ரீ-2)



மியன்மார் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் ஆங்சான் சூகியை அவுஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் கெவின் ரூட் சந்தித்து உள்நாட்டு நிலவரம் பற்றி கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

## திபெத்திய எழுத்தாளருக்கு சிறை

தென்மேற்கு சீனாவில் திபெத்திய எழுத்தாளர் ஒருவருக்கு 4 வருட சிறைத்தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட ஒரு சஞ்சிகையில் தாசி ரப்டென் என்னும் இளம் எழுத்தாளர் செய்த பணிகளுக்காக அவருக்கு இந்த தண்டனை வழங்கப்பட்டதாக திபெத்திய செயற்பாட்டுக்குழு ஒன்று கூறியுள்ளது.


திபெத்திய இனத்தவர்களுக்கும் சீன அரசாங்கத்துக்கும் இடையில் மிகவும் கடுமையான முரண்பாடுகள் காணப்படும் பகுதியிலிருந்து இந்தச் சஞ்சிகை வெளிவருகிறது.

கிழக்குப் பனி மலை என்னும் தடை செய்யப்பட்ட வெளியீட்டில் தாசி ரப்டென் எழுதியிருந்ததாக கூறப்படுகின்றது.

2008 இல் திபெத்திய பகுதிகளில் நடந்த தொடர்ச்சியான வன்செயல், மோதல்களின் பின்னராக அரசாங்க கொள்ளைகளை அவர் அதில் அலசியிருந்தார். இந்த சஞ்சிகையில் பணியாற்றிய வேறு மூன்று பேரும் பிரிவினையை தூண்டியதாக குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த ஆண்டில் சிறையிடப்பட்டனர்.

திபெத் இனத்தவர்கள் பெருமளவில் வாழ்ந்து வரும் சிச்சுவான் மாகாணத்தில் அபா என்னும் மலைப்பாங்கான இந்தப் பிரதேசத்தில் இன்னமும் பதற்றம் அதிகமாக காணப்படுவதாக நாடு கடந்து வாழும் திபெத்தியர்கள் கூறுகின்றனர்.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் திபெத்திய தலைநகரான லாசாவில் வெடித்த சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அடுத்து எதிர்ப்பாளர்களை அடக்குவதற்கு சீன அரசாங்கம் முயற்சித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)





யாழ். மாவட்ட மற்றும் கிளிநொச்சி மாவட்ட சுதந்திரக் கட்சி வேட்பாளருக்கான பயிற்சிப் பட்டறை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மங்கல விளக்கேற்றுவதையும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பொருளாதார அபிவிருத்திய மைச்சர் பசில் ராஜபக்ஷ, பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட வேட்பாளர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

## சிறப்பு சொற்பொழிவு

(மருதங்கேணி)

தென்புலோலி புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சிறப்பு சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை மாலை 5 மணி தொடக்கம் 6 மணிவரை பெரிய புராணம் என்னும் தலைப்பில் பண்டிதர் பொன். சுகந்தன் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-2-35)

# சரத் பொன்சேகா இனவாத கருத்துக்களை கொண்டுள்ளார்

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சிங்கள இனவாதக் கருத்துக்களைக் கொண்டிருப்பதாக ரெலோ அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நீதிமன்ற வளாகத்திலிருந்து வெளியேறும் போது சரத் பொன்சேகா வெளியிட்ட கருத்து இனவாத அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரப் பகிர்வு குறித்து பேசாது சிங்கள மக்களுடன் தமிழர்கள் இணைந்து வாழப் பழகிக் கொள்ள வேண்டுமென சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளதாகவும் இதன் மூலம் அவரது இனவாத கொள்கை வெளிப்பட்டுள்ளதாகவும் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதாகத் தெரிவித்த காரணத்தினால் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாகவே சரத் பொன்சேகாவிற்கு அதிகளவான தமிழர்கள் ஆதரவளித்ததாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரைப் போன்றே சரத் பொன்சேகாவும் ஓர் இனவாதி என அவர் குற்றம் சுமத்தியுள்ளதாக



சிங்கள இணைய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இலங்கை சிங்களவர்களின் நாடு எனவும் விரும்பினால் தமிழர்கள் இலங்கையில் வாழ முடியும் எனவும் சரத் பொன்சேகா குறிப்பிட்டிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள இனவாதத் தரப்பினர் தொடர்ச்சியாக தமது கொள்கைகளை முன்னெடுக்க முயற்சித்தால் சர்வதேச சக்திகளின் ஒத்துழைப்புடன் ஈழ இராச்சியமொன்றை உருவாக்குவதனை எவராலும் தடுக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# திருமலையில் 5 சிறுமிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம்

(கொழும்பு)

திருகோணமலையில் வெவ்வேறு சம்பவங்களில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட 5 சிறுமிகள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சேருவில் பொலிஸ் பிரிவில் இரு சிறுமிகளும் கோமரன்கடவை பொலிஸ் பிரிவில் ஒரு சிறுமியும் குச்சவெளி பொலிஸ் பிரிவில் ஒரு சிறுமியும் திருகோணமலை பொலிஸ் பிரிவில் ஒரு சிறுமியும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட நிலையில் கடந்த வாரம் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளன்ர்.

இச்சிறுமிகள் 12 வயதிற்கு கீழ்ப்பட்டவர்களெனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவங்களுடன் தொடர்புடையவர்களெனக் கருதப்படும் ஆசிரியர், சாரதி உள்ளடங்கலாக ஐந்து பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மூதூரில் சிறுவனொருவன் கிறிஸ்தவ மதகுரு ஒருவரால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அச்சிறுவன் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இந்தப் பாலியல் துஷ்பிரயோக சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் குறித்த மதகுருவை தேடி பொலிஸார் வலை வீசியுள்ளனர். (ஸ்ரீ-2)

# தேர்தல் சட்டங்கள் குறித்து பாதுகாப்பு தரப்பினருக்கு போதிய விளக்கமில்லை

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேர்தல் சட்டங்கள் குறித்து பாதுகாப்பு தரப்பினருக்கு போதிய விளக்கம் கிடையாது என ஜே.வி.பி.கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவிற்கும் கட்சி செயலாளர்களுக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பின் போது ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் மஹிந்த தேசப்பிரிய இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இடம்பெயர் மக்கள் தேர்தலில் வாக்களிப்பதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை தேர்தல் சட்டங்கள் குறித்து பாதுகாப்பு தரப்பினருக்கு எதிர்காலத்தில் போதியளவு விளக்கம் அளிக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் உறுதியளித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நுகேகொடையில் சுற்றிவளைப்பு தேடுதல்; 77 பேர் புலனாய்வுப் பிரிவால் கைது

(கொழும்பு)

நுகேகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நடத்தப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு தேடுதலின் போது பிடியாணை பிறப்பித்த பின்பு யாருக்கும் தெரியாமல் தலைமறைவாக இருந்த 77 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நுகேகொடை பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் திடீரென 13 பொலிஸ் நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் நடத்திய சுற்றிவளைப்பு தேடுதலிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பலர் பல வருடகாலமாக தலைமறைவாகி வாழ்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்திற்குரிய நபர்கள் பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாக நுகேகொடை பொலிஸ் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

இரண்டும் இரண்டும் நான்குதான்; அதையும் கூட ஒருமுறைக்கு இருமுறை சரிபார்த்துச் சொல்லுங்கள். –விட்டன் பர்க்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சூடு பிடித்துள்ள உள்ளூராட்சித் தேர்தல்

உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டன.

தேர்தல் பிரசாரம் என்றால் தடல்புடலான வாக்குறுதிகள், வாய்ப் பேச்சுகள் என்பவற்றுக்கு குறைவேயில்லை.

ஆளும் தரப்போ தனது அமைச்சர் குழாமை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி தேர்தல் பிரசார வியூகம் அமைத்து களத்தில் இறங்குகின்றது.

ஓ! அன்புக்குரிய தமிழ் மக்களே! கடந்த 30 வருட கால யுத்தத்தால் நீங்கள் பட்ட துன்பம் போதும். இனிவரும் காலம் உங்களுக்கு அபிவிருத்தியும் ஆனந்தமுமாகவே இருக்கும். வீதிகளைப் பாருங்கள்; வீடுகளைப் பாருங்கள்; மீள்குடியேற்றத்தின் விரைவைப் பாருங்கள். எல்லாம் உங்களுக்காக என்று ஆளுந்தரப்பு முழக்கம் இடுகின்றது.

மறுபுறத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பிரசாரப் பீரங்கி பூட்டி, ஊர்ஊராக வலம் வருகிறது.

அளவெட்டியில் நடந்த அராஜகம், காணாமல் போனவர்களின் நிலைவரம், மீள்குடியேற்றத்தின் தாமதம் பாரீர் பாரீர் இப்படி உச்சாடனம் செய்வதுடன் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றை வழங்க அரசாங்கம் மறுத்தால் போராட்டம் வெடிக்கும் என்று மார்தட்டிப் பேசுகின்றனர்.

அவர்கள் அபிவிருத்தி என்கிறார்கள்– இவர்கள் போராட்டம் வெடிக்கும் என்கிறார்கள். தமிழ் மக்களோ நடுக்கத்தில் உறைந்து போயுள்ளார்கள்.

சனி, ஞாயிறுகளில் மின்சாரம் கட். ஊர் வீதிகளில் கிடங்கு,வேலையில்லா இளைஞர்களின் பரிதவிப்பு, பாச உறவுகளின் இழப்பு இந்தச் சோகத்தில் எந்தப் பிரசாரத்தை நம்புவது?

ஓ! கடவுளே இந்த வாக்களிப்பு நாள் முடியும் வரை, ஊர்க் கோயில்களில் கட்டப்பட்ட ஒலிபெருக்கித் தொந்தரவு போல இந்த தேர்தல் பிரசாரமும்.

எப்பதான் இவை முடியுமோ என்று மக்கள் ஏங்கித் தவிக்கிறார்கள்.

யார் வாக்கை நம்புவது, யாருக்கு வாக்களிப்பது என்ற சிக்கலுக்கான முடிவுதான் என்ன?

இருதரப்பிடமும் 'பொய்யுரை' நிறையவே இருக்கிறது. இதில் குறைந்த பொய்ப்பேச்சு யாருடையது என்பதை இனங்காண்பதிலேயே எல்லாம் தங்கியுள்ளது.

ஓ! பொறுத்திருந்து பார்ப்போம். இன்னும் பத்தொன்பது நாட்கள் இருக்கின்றன.

வாக்கு அவர்களுக்கா அல்லது இவர்களுக்கா அல்லது எங்களுக்கா என்பதை தீர்மானிப்போம்.

அட! வாக்கு எங்களுக்கென்றால் எங்கட வீட்டிலேயே எங்கட வாக்கை வைத்திருப்பதைதான் எங்களுக்கென்று கூறினோம். அவ்வளவு தான்.

# அநாதரவான பிள்ளைகளின் கல்விக்கு வித்திட்ட இந்துபோட் இராசரத்தினம்



இலங்கையில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப் பகுதியிலே சைவம் வளர்த்த சான்றோர்களில் இந்து போர்ட் சு.இராசரத்தினம் அவர்கள் குறிப்பிடத்தக்கவராவார். இவர் 1884 ஆம் ஆண்டு ஆடி மாதம் 4 ஆம் திகதி இம் மண்ணிலே வந்துதித்தார். இவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியையும் பயின்றார்.

கொழும்பு சட்டக்கல்லூரியில் பயின்று சட்டத்தரணியான இவர் குடியியல் சட்டத்துறையில் சிறந்த அறிஞரானார். யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதியரசராகப் பல தடவை கடமை புரிந்தார். அத்தகைய உயர்ந்த பதவி களையெல்லாம் வகித்த இராசரத் தினம் அவர்கள் அவற்றை உதறி விட்டு சைவத்தினையும் தமிழையும் வளர்க்கத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் சைவக்கல்வி மரபு பெரிதும் பாதிப் படைந்திருந்தது. இந்நிலையில் சைவ க்கல்வி மரபினையும் சமூகத்தினை யும் பாதுகாத்து மேன்மைப்படுத்தும் நோக்கில் இந்துபோர்ட் சு.இராசரத்தினம், சேர். பொன்.இராமநாதன் முத லானவர்களால் 1923ஆம் ஆண்டு மார் கழி மாதம் சைவவித்தியா விரு த்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இவர் அதன் முகாமையாளராகவும் செயலா ளராகவும் இருந்து அதன் இலட்சிய ங்களை முன்னெடுத்துச்செல்வதில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

இவர் சைவத் தமிழ்ப் பாடசாலைகளையும் தமிழ்,ஆங்கிலம் கற்பிக்கும் இரு மொழிப் பாடசாலைகளையும் நிறுவி சைவப் பாரம்பரியங்களைப் பேணும் வகைசெய்தார்.

கிறிஸ்தவ சூழலிலே அநாதரவாகக் காணப்பட்ட சைவப்பிள்ளைகளின் கல்வியிலும் போதிய கவனம் செலுத்தினார். சைவப்பிள்ளைகள் கிறிஸ்தவப் பாடசாலைகளில் கல்வி பயின்றாலும் அவர்கள் வீபூதி தரித்து தமது சைவப் பண்பாட்டிற்கமைவாகப் போகலாம் என் பதைச் சட்டசபையில் தனது தனியார் தீர்மானத்தின் மூலம் நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

சைவக் கல்விப் பாரம்பரியத்தை விரு த்தி செய்வதன் மூலம் சைவசமயத்தவரின் சமுதாய வளர்ச்சிக்கு வித்திட்ட சு.இராசரத்தினம், அநாதரவான பிள்ளைகளும், சமூகத்தில் பின் தங்கிய மாணவர்களும் கல்வி கற்பதற்குரிய வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.

இவர் 1930 இல் திருநெல்வேலியில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான இரு விடுதிகளை உள்ளடக்கிய இல்லத்தையும் பாடசாலையையும் உருவாக்கினார். இவை இன்றும் சிறப்பாக இயங்கி வருகின்றன.

## இன்று இவரது பிறந்ததினம்

ஈழத்துச் சைவத்தமிழ் மக்களிற்கு அளப்பெரும் தொண்டாற்றிய இச் சைவப் பெருமகன் 1970 ஆண்டு பங்குனி மாதம் 12 ஆம் திகதி சிவபதமடைந்தார்.

ரஜீவனா–ராஜன்

# சைவமும் தமிழும் வளர்த்த சான்றோன் இந்துபோட் இராசரத்தினம்

சைவமும் தமிழும் வளர்த்த சான்றோன் *இந்துபோட்* இராசரத்தினம் எனும் பெருமகனின் அவதாரதினம் இன்றாகும்.

இவர் சைவத் தமிழ்ச் சிறார்கள்தமது சூழலிலேயே கல்வியை கற்க வேண்டும் என்ற நாவலரது சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுத்தவர். சைவத் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியாக சட்டசபையிலும் அங்கம் வகித்தவர். ஒரு மைல் தூரத்துள் ஒரு பாடசாலையை தவிர வேறு அமைக்கக் கூடாது என்ற ஆங்கிலேயரின் தீர்மானத்தை இல்லாது செய்தது மட்டுமன்றி பிற மதப்பாடசாலைகள் அருகிலே சைவத் தமிழ்ப் பாடசாலைகளையும் நிறுவினார்.

சைவத் தமிழ் உலகிலே எவரும் சாதிக்க முடியாத சாதனையாக 187 சைவத் தமிழ்ப் பாடசாலைகளை இலங்கை பூராகவும் நிறுவினார்.

சைவத்தையும் தமிழையும் இரு கண்களாக போற்றிய இவர் 1928 ஆம் ஆண்டிலே சிறந்த சைவ ஆசிரியர்களை உருவாக்குவதனூடாக சிறந்த மாணவ சமுதாயத்தினை உருவாக்க முடியும் என்ற இலட்சிய நோக்கோடு சைவ ஆசிரியர் கலாசாலையையும் நிறுவி இலட்சியத்தை ஈடேற்றினார்.

இவர் அநாதரவான பிள்ளைகளுக்கு சமூகத்தில் பின்தங்கிய பிள்ளைகளும் வறுமைகாரணமாக கல்வியைத் தொடர முடியாத பிள்ளைகளும் சமூகத்தில் உயர்நிலையை அடைய வேண்டும் என்ற வேணவாக் கொண்டார். இதனை செயல்வடிவமாக்க திருநெல்வேலியிலே சைவச்சிறுவர் இல்லம் ஒன்றை உருவாக்கினார்.

அவரது நினைவு நாளிலே சைவமும் தமிழும் சிறப்புற்று விளங்கும் இணுவில் மேற்குப் பகுதியிலே அவரது நினைவுத் தொழிற்பயிற்சிக் கூடம் ஒன்று சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினரால் பல இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாடிக் கட்டடத்தில் ஆரம்பித்து வைக்கப்படுவது போற்றுதற்குரியதே இவர் பணியை சைவத்தமிழ்ச் செல்வந்தர், பொதுநிறுவனங்கள், சமய ஸ்தலங் கள் முன்னுதாரணமாகக் கொண்டு சேவையாற்ற முன்வரவேண்டும். இதனால் சைவமும் தமிழும் தளைத்து ஓங்கும் என அசையாது என இயம்பலாம்.

சின்னத்தம்பி–பத்மராஜா M.Phil,
பணிப்பாளர் சபை உறுப்பினர்,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்

# பல்கலை மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை

புதிதாக பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகும் மாணவர்களின் ஊட்டச்சத்து நிலை குறித்து ஆய்வு நடத்த சுகாதார அமைச்சு தீர்மானம் எடுத்துள்ளது.

இதன்படி பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக தேர்தெடுக்கப்பட்ட அனைத்து மாணவர்களும் சுகாதார அமைச்சின் உத்தரவுப்படி மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்படும் காலத்தில் மருத்துவப் பரிசோதனைகளும் நடத்தப்படும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி மாணவர்களின் போசாக்கு குறித்து ஆராயப்பட்டு அவர்களுக்கு தேவையான ஆலோசனை வழங்கப்படுவதுடன், போசாக்கு குறைபாடு உள்ள மாணவர்களுக்கு அதனை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளும் சொல்லிக் கொடுக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ந)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## நாள் கணக்கில் சிந்தியுங்கள்



அனைத்திலும் கடவுளைக் காண்பது தான் மனிதனின் இலட்சியம். அனைத்திலும் பார்க்க முடியாவிட்டால் நாம் மிகவும் நேசிக்கும் ஒன்றி லாவது பார்க்க வேண்டும்.

அறிவு, உள்ளம் ஆகிய இரண்டிலும் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள். ஏனென்றால் அறிவாற்றலால் ஒரு போதும் செல்லவே முடியாத மிகவும் உயர்ந்த மனநிலைக்கு இதயம் ஒருவனை அழைத்துக் கொண்டு போகிறது.

உண்மை,தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக் கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுலகிலோ எங்கும் கிடையாது. இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனைப் பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு.

எண்ணமே நம்மில் தூண்டும் சக்தி. மனத்தை உயர்ந்த எண்ணங்களினால் நிரப்புங்கள். நாட்கணக்காக சிந்தியுங்கள். தோல்விகளைப் பொருட்படுத்தாதீர்கள்.

# பத்மநாப சுவாமி கோயிலின் இரகசிய அறைகளில்
# 50 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள பொக்கிஷங்கள்

(திருவனந்தபுரம்)

திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோவிலின் இரகசிய அறைகளில் இருக்கும் விலை மதிப்பற்ற தங்கம், அணிகலன்கள் சிலைகள் உள்ளிட்ட பொருட்களை கணக்கெடுக்கும் பணி நேற்று முன்தினம் தொடர்ந்தது. நேற்று முன்தினம் கணக் கெடுப்பின் போது தங்க விஷ்ணு சிலை ஒன்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இந்த விஷ்ணு சிலையில் விலை மதிப்புமிக்க கற் கள் பொருத்தப் பட்டுள்ளன. கோவிலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பொக்கிஷங்களின் மதிப்பு 50 ஆயிரம் கோடிக்கு மேல்இருக்கும் என்பதால் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

திருவாங்கூர் அரச குடும்பத்தினாரின் நிர்வாகத்தில் உள்ள திருவனந்தபுரம் பத்ம நாப சுவாமி கோவிலில் உள்ள நான்கு இரகசிய அறைகளை திறக்க கோரி உச்ச நீதிமன்றில் பொதுநலமனு ஒன்று தாக்கல் செய்யப் பட்டது. இம்மனுவை விசாரித்த உச்சநீதி மன் றம் இரகசிய அறைகளை திறப்பதற்கு முன்னாள் நீதிபதிகள் உள்ளிட்ட ஏழு பேர் கொண்ட குழுவை நியமித்து உத்தரவிட்டது. அதே நேரத்தில் பத்மநாப சுவாமி கோவிலை மாநில அரசு எடுத்துக் கொள்ள தடை விதித்தது. உச்ச நீதிமன்றில் நியமித்த இக்குழு கடந்த ஜுன் 27 ஆம் திகதி அறைகளை திறக்க தொடங்கியது. மூன்று அறைகளில் இருந்த பொருட்கள் பட்டியலிடப்பட்டநிலையில் நான்காவது அறை கடந்த வெள்ளிக்கிழமை திறக்கப் பட்டது. கடந்த 130 ஆண்டுகளாக பூட்டிக் கிடந்த அறை இப்போதுதான் திறக்கப்பட்டுள்ளது.

இதில் தங்க நகைகள், ஆபரணங்கள், கற்கள் பதித்த கிரீடங்கள், தங்க பாத்திங்கள், தங்க தாம்பாளங்கள், விளக்குகள், தங்கத்தாலான வழிபாட்டு பொருட்கள் மற்றும் பல்வேறு பாரம்பரிய கலைநயம் மிக்க பொருட்கள் இருந்தன. பிரமிக்கத்தக்க வகையில் விலை மதிப்பில்லாத வைர, வைடூரிய, தங்க, வெள்ளி பொருட்களும் இருந்தன.


இந்நிலையில் இரகசிய அறைகளில் உள்ள பொருட்களை கணக்கெடுக்கும் பணி ஆறாவது நாளாக நேற்று முன்தினம் தொடர்ந்தது. அப்போது அற்புதமான கலைவண்ணத்தில் உருவான தங்க விஷ்ணு சிலை இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அந்த விஷ்ணு சிலையில் விலை மதிப்புமிக்க கற்கள் பதிக்கப்பட்டுள்ளன.

இதுதவிர மரகத கற்கள், பலவிதமான தங்க சங்கிலிகள், இராசிக்கற்கள் பதித்த மோதிரங்கள் போன்றவையும் இருந்தன. கோவிலில் உள்ள இரகசிய அறைகளில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட பொக்கிஷங்களின் மதிப்பு 50 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலிருக்கும் என கூறப்படுகிறது.



பத்மநாப சுவாமி கோவிலில் உள்ள இரகசிய அறைகளில் வைக்கப்பட்டிருந்த பொக்கிஷங்களை கணக்கெடுக்கும் பணி 1932 ஆம் ஆண்டிலும் நடந்ததாக அப்போதே மலையாள மனோரமா பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. திவாங்கூர் சமஸ்தானத்தில் மன்னராக சித்திரை திருநாள் பொறுப்பேற்ற பின் இந்த இரகசிய அறைகள் திறக்கப்பட்டு கணக்கெடுப்பு பணி நடந்துள்ளது. அப்போது 20 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வெள்ளி நாணயங்கள், 30 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்க நாணயங்கள் மற்றும் நகைகள் இருந்ததாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. இருந்தாலும் நகைக[illegible]ரின் மதிப்பு உறுதி செய்யப்படவில்லை.

கோவிலில் தங்கம், வைரம், விலைமதிப்புமிக்க சிலைகள் என ஏராளமான பொக்கிஷங்கள் இருப்பதால் நேற்று முன்தினம் முதல் கோவிலில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 60 பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். கோவிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் பாதுகாப்பை நிரந்தரமாக்குவது குறித்து நேற்று முன்தினம் பேட்டியளித்த கேரள டி.ஜி.பி. ஜேக்கல் புன்னூஸ், இப்புதிய பாதுகாப்பு பணியில் விரைவில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்ட வீரர்கள் நவீன ரக ஆயுதங்களுடன் பாதுகாப்பில் ஈடுபடுவர். அதற்கான பணிகள் விரைவாக நடக்கும் என்றார். (ஸ்ரீ-2)



நடிகர் கார்த்தி -ரஞ்சினி திருமணம் நேற்று முன்தினம் காலை கோவை கொடிசியாவில் அமைக்கப்பட்ட அரங்கில் கோலாகலமாக நடைபெற்றது. இந்நிகழ்வில் உறவினர் கள் சகிதம் தம்பதியினர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

## பாரதச் செய்திகள்

# இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் சீனப்பிரசன்னம் கவலைக்குரிய விடயம்

## இந்திய விமானப் படைத்தளபதி தெரிவிப்பு

(டில்லி)

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்து வருவது குறித்து இந்தியாவின் தென்பிராந்திய விமானப்படைத் தளபதி எயார் மார்ஸல் சுமித் முகர்ஜி கவலை தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கடற்கொள்ளை நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதுடன் இந்தியாவின் ஆட்புல எல்லைக்கு நெருக்கமாக அவை இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்ததாக நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தென் பிராந்திய விமானப்படை கட்டுப்பாட்டுத் தலைமையகத்தில் அவருக்கு வழங்கப்பட்ட பிரியாவிடைவைபவத்தில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது,

இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனப் பிரசன்னம் கரிசனைக்குரிய விடயமாக வுள்ளது. இந்த விவகாரமானது நிச்சயமாக கவலைக்குரிய விடயமாகும். ஆனால் கரிசனைக்குரிய இந்த விடயம் குறித்து சகலரும் அறிந்திருப்பார்கள் என நான் நினைக்கிறேன்.

கடற்கொள்ளையர்க்கு எதிரான நடவடிகைகளில் இந்திய கடற்படை ஈடுபட்டுள்ளது. கடற்கொள்ளையர்கள் தமது ஆயுதபலத்தை அதிகரித்து வருகின்றனர். அவர்களின் தாக்குதல்கள் தற்போதும் கடினமான நிலைமையில் இருக்கின்றது.

இதனால் மேலதிக ராடர் பிரிவின் ஆளற்ற விமானங்களையும் பிராந்தியத்தில் கொண்டிருக்க வேண்டும். இந்து சமுத்திரத்தில் மலாக்கா நீரிணை தொடக்கம் கோர்முஸ் நீரிணை வரை கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும். (ந)

# சோனியாவை சந்தித்தார் ஹசாரே
# லோக்பால் மசோதா நிறைவேற்றப்படாவிடின் திட்டமிட்டபடி உண்ணாவிரத போராட்டம்

காங்கிரஸ் தலைவர் சோனியாவுடனான சந்திப்பு பயனுள்ளதாக இருந்தது. கடுமையான விதிமுறைகளுடன் கூடிய சரியான லோக்பால் மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை. இல்லையெனில் திட்டமிட்டபடி உண்ணாவிரத போராட்டம் நடத்தப்படும் என காந்தியவாதி அன்னா ஹசாரே கூறியுள்ளார்.

கடுமையான விதிமுறைகளுடன் கூடிய லோக்பால் மசோதாவை நிறைவேற்றும்படி அன்னாா ஹசாரே தலைமையிலான குழு மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. ஆனால் பிரதமர் உள்ளிடோரை லோக்பால் மசோதா வரம்பிற்குள் கொண்டு வருவது உள்ளிட்ட ஹசாரே குழுவினரின் சில கோரிக்கைகளை மத்திய அரசு ஏற்க மறுக்கிறது.

தங்கள் கோரிக்கைக்கு ஆதரவு திரட்டுவதற்காக அனைத்து அரசியல் கட்சி தலை. வர்களையும் அன்னா ஹசாரே தலைமையிலான இந்தகுழு சந்தித்து வருகிறது. காங்கிரஸ் தலைவர் சோனியாவை இந்த குழுவினர் கடந்த வாரம் சந்திப்பதாக இருந்தது.

ஆனால் இந்த சந்திப்பு நிகழவில்லை. இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு சோனியாவை சந்திப்பதற்கு அன்னா ஹசாரேவுக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. சோனியாவின் வீட்டுக்கு அன்னா ஹசாரேயும் அரவிந்த் கெஜ்ரிவாலும் சென்றனர். அங்கு சோனியா, காங்கிரஸ் மூத்த தலைவர்கள் ,பிரணாப் முகர்ஜி, ஜனார்த்தன், திவேதி ஆகியோருடன் லோக்பால் மசோதா தொடர்பாக ஆலோசனை நடத்தினர்.

இதன்பின் செய்தியாளர்களிடம் ஹசாரே கூறியதாவது, காங்கிரஸ் தலைவர் சோனியாவுடனான சந்திப்பு பயன் உள்ள வகையில் இருந்தது. எங்கள் குழு சார்பில் தயாரிக்கப்பட்ட லோக்பால் வரைவு மசோதா குறித்தும் அரசு பிரதிநிதிகள் தயாரித்த வரைவு மசோதா குறித்தும் அவரிடம் விளக்கினோம்.

இரண்டு மசோதாகளுக்கும் உள்ள வேறுபாடு குறித்தும் விளக்கினோம். குறிப்பாக 15 முக்கியமான பிரச்சினைகள் குறித்து அவரிடம் எடுத்துக் கூறினோம். கட்சியின் முக்கிய நிர்வாகிகளிடம் ஆலோசனை நடத்தியபின் இது குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக சோனியா உறுதி அளித்தார்.



கடுமையான விதிமுறைகளுடன் கூடிய சரியான லோக்பால் மசோதா பாராளுமன்றில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்பதே எங்கள் விருப்பம். இது நடக்கவில்லை என்றால் ஏற்கனவே அறிவித்தபடி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 16 ஆம் முதல் திட்டமிட்டபடி காலவரையறையற்ற உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பிப்போம். இவ்வாறு அவர்கள் கூறினர். (ஸ்ரீ-2)

# 3ஆவது ஒருநாள் போட்டி இலங்கை வெற்றி

இங்கிலாந்து அணியுடனான மூன்றாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 6 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடிவரும் இலங்கை அணி 3 டெஸ்ட், ஒரே ஒரு இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது. டெஸ்ட் தொடரை இங்கிலாந்தும், இருபது-20 போட்டியை இலங்கையும் வெ ன்றிருந்த நிலையில் ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் இங்கிலாந்தும் மற்றைய ஒருநாள் போட்டியில் இலங்கையும் வென்றிருந்தன.

இந்நிலையில் மூன்றாவது ஒருநாள் போட்டி லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வுசெய்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 7 விக்கெட் இழப்பிற்கு 246 ஓட்டங்களை எடுத்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களம் இறங்கிய அணித்தலைவர் அலிஸ்டயர்குக் 143 பந்துகளில் 119 ஓட்டங்களை பெற்றார். ஒருநாள் சர்வதேச போட்டிகளில் அவர் பெற்ற இரண்டாவது சதம் இதுவாகும்.

இலங்கைப் பந்து வீச்சாளர்களில் லஷித் மலிங்க, சுரங்கலக்மால், ஜீவன் மெண்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர் .

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.2 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றிஇலக்கை அடைந்தது.

தினேஸ் சந்திமால் 126 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 105 ஓட்டங்களை பெற்றார்.

மஹேல ஜெயவர்த்தன 79 ஓட்டங்களை பெற்றார்.

தினேஸ் சந்திமால் தனது 6வது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் 2வது சதத்தை பெற்றுள்ளமை குறிப்பிட தக்கது.

அவர் 94 ஓட்டங்களை பெற்றிருந்த போது சிக்சர் ஒன்றை அடித்து சதத்தை பூர்த்தி செய்தார்

5 போட்டிகள் கொண்ட இத தொடரில் இலங்கை அணி தற்போது 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.


# மரண அறிவித்தல்

## திருமதி பாலசாமி கமலாம்பிகை



சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசாமி கமலாம்பிகை 03.07.2011 நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசாமியின் அன்பு மனைவியும், புஷ்பரத்தினம், ஈ.எஸ். கே.கந்தசாமி, சுந்தரலிங்கம், மருக்கொழுந்து ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஜெயபாலனின் அன்புத் தாயாரும், மேனகாவின் பாசமிகு மாமியாரும், சுமேஷ், காதேவ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 04.07.2011 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகன கிரிகைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.


நிகரை வீதி,
சங்கானை

தகவல்:
பா.ஜெயபாலன் (மகன்)

(5483)


# இந்திய-மேற்கிந்தியத்தீவுகள் இடையேயான இரண்டாவது டெஸ்ட் சமனிலையானது

(பார்படாஸ்)



இந்தியா, மேற்கிந்தியதீவுகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் சமனிலையில் முடிந்தது. மேற்கிந்தியதீவுகளுக்கு சுற்றுப் பயணம் செய்துள்ள இந்திய அணி, மூன்று போட்டிகள் கொண்ட டெஸட் தொடரில்பங்கேற்கின்றது.

முதல் டெஸ்டில் வெற்றிபெற்ற இந்திய அணி, 1-0 என முன்னிலை வகிக்கிறது இரண்டாவது டெஸ்ட் பார்படாஸ் நகரில் உள்ள கென் சிங்டன் ஓவல் மைதானத்தில் நடந்தது.

இந்திய அணிக்கு லக்ஸ்மன் (85), ரெய்னா (53) கைகொடுக்க, முதல் இன்னிங்சில் 201 ஓட்டங்கள் எடுத்தது.

மேற்கிந்தியதீவுகள் அணி முதல், இன்னிங்சில் 190 ஓட்டங்கள் எடுத்தது. பின் இரண்டாவது இன்னிங்சை துவக்கிய இந்திய அணி, மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 23 ஓட்டங்கள் எடுத்து 34 ஓட்டங்கள் முன்னிலை வகித்திருந்தது.

இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த இந்திய அணிக்கு இரண் டாவது விக்கெட்டுக்கு 23 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் அபினவ் முகுந்த் (48) அரை சத வாய்ப்பை இழந்து வெளியேறினார்.

பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய டிராவிட், சர்வதேச டெஸ்ட் அரங்கில் 60 வது அரைசதம் (55) கடந்து அரங்கு திரும்பினார்.

அங்கு ஓரளவு ஆறுதல் தந்த லட்சுமன், சர்வதேச டெஸட் அரங்கில் 51 வது அரை சதம் (87) கடந்து வெளியேறினார்.

அணித்தலைவர் தோனியும் (05 ஓட்டங்கள்) நிலைக்கவில்லை. இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்கு 269 ஓட்டங்கள் எடுத்தபோது தோனி டிக்ளேர் செய்வதென துணிச்சலான முடிவை எடுத்தார்.

ரெய்னா 12, ஹர்பஜன் சிங் 06 ஆட்டமிழக்காமல் இருந்தனர். மேற்கிந் தியத்தீவுகள் சார்பில் எட்வர்ட்ஸ் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**திணறல் துவக்கம்**

இரண்டாவது இன்னிங்ஸில் 281 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு பரத், சிமன்ஸ் துவக்கம் கொடுத்தனர். அதிரடியாக துவக்கிய சிமன்ஸ் 14, சர்வான் 08 அடுத் தடுத்து ஆட்டமிழந்தனர். பரத் 27 ஓட்டங்கள் எடுத்தார்.

இடைவேளையின்போது 2 ஆவது இன்னிங்ஸில் மேற்கிந்தியத்தீவுகள் அணி மூன்று விக்கெட் இழப்புக்கு 108 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

மேற்கிந்தியத்தீவுகள் அணி 5 விக்கெட் இழப்புக்கு 181 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டது. இதனால் சிறிது நேரம் ஆட்டம் தடைப்பட்டது. பின்னர் மீண்டும் போட்டி துவங்கியது.

இதன் பிறகு சந்தர்போல் மற் றும் சாமுவேல்ஸும் இணைந்து ஓட்டங்களைச் சேர்க்கத் தொடங்கினர். சந்தர்போல் 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.



பாவ் 02 ஓட்டங்களிலும், சமி 15 ஓட்டங்களுடனும், ராம்போல் மற்றும் எட்வெட்ஸ் ஓட்டமெதுவும் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். சாமுவேல் சிறப்பாக விளையாடி 78 ஓட்டங் களுடன் களத்திலிருந்தார். இத்துடன் 5ஆம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்ததால் இரண்டாவது டெஸ்ட் சம நிலையில் முடிந்தது.

இரண்டாவது இன்னிங்ஸில் இசாந்த் சர்மா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஆட்ட நாயகன் விருது இசாந்த் சர்மாவுக்கு வழங்கப்பட்டது.

# கிரிக்கெட்டிலிருந்து அரசியலை அகற்றுக

## ஐ.சி.சி. 2 வருட காலக்கெடு விதிப்பு



தேசிய கிரிக்கெட் சபைகள் அரசியல் தலையீடுகளிலிருந்து விடுபட்டு, சுதந்திரமான தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படும் அதிகாரிகளால் நிர்வகிப்பதற்கு ஏற்ற வகையில் யாப்புகளை திருத்திக்கொள்வதற்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி) இரண்டு வருடகால அவகாசம் வழங்கியுள்ளது.

ஹொங்கொங்கில் நடைபெற்ற ஐ.சி.சி நிறைவேற்றுக்குழு கூட்டத்தின் போது இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இது ஒரு முக்கிய விவகாரம் என ஐ.சி.சி பிரதம நிறைவேற்று அதிகாரி ஹாருன் லோர்காட் தெரிவித்துள்ளார். 2012 ஆம் ஆண்டு இறுதிக்குள் அனைத்து அங்கத்துவ நாடுகளின் கிரிக்கெட் சபைகளும் சுதந்திரமான தேர்தல் நடத்தப்படுவதற்கும் அரசியல் தலையீடுகளிலிருந்து விடுபடுவதற்கும் ஏற்றவாறு தமது யாப்புகளை திருத்திக்கொள்ள வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

டெஸ்ட் அந்தஸ்துள்ள நாடுகளில் இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் கிரிக்கெட் சபைகளில் இத்தீர்மானம் கடும் தாக்கத்தை ஏற்படுத்தும் என நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் யாப்பின்படி அந்நாட்டின் தலைவரே கிரிக்கெட் சபைக்கும் தலைவராக விளங்குவார். இலங்கை கிரிக்கெட் சபையானது விளையாட்டுத்துறை அமைச்சு பதில்கூறும் கடப்பாடுடையதாகவுள்ளது.

நீண்டகாலமாக இடைக்கால நிர்வாகக் குழுவினாலேயே கிரிக்கெட் சபை நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பங்களாதேஷில் கிரிக்கெட் சபைத் தலைவர்கள் அனைவருமே அரசாங்கத்தினாலேயே நியமிக்கப்பட்டனர்.

இந்நிலையில் 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குமுன் இத்தீர்மானங்களை அமுல்படுத்தும்படி கிரிக்கெட் சபைகளை ஐ.சி.சி கோரியுள்ளது. எனினும் அதன்பின் மேலும் ஒரு வருட சலுகைக் காலம் வழங்கப்படும். 2012 ஜூனில் ஐ.சி.சி தீர்மானங்களுக்கு இணங்க குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருக்காவிட்டால் அச்சபைகளுக்கு தான் வழங்கும் பொதுவான யாப்பொன்றை ஒரு வருடகாலத்திற்குள் அமுல்படுத்தும்படி ஐ.சி.சி வலியுறுத்தும்.

அதை நிறைவேற்றத் தவறினால் தடைகள் விதிக்கப்படுதல், அங்கத்துவம் இடைநிறுத்தப்படுதல் போன்ற தண்டனைகளை எதிர்நோக்க நேரிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியக் கிரிக்கெட் அணிக்கு அபராதம்


மேற்கிந்திய அணியுடனான இரண்டாவது டெஸ்ட்போட்டியில் மெதுவான விதத்தில் பந்துவீசிய குற்றச்சாட்டின் காரணமாக இந்திய அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பார்படோஸின் கென்சிங்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியின் இறுதி நாளான நேற்று முன்தினம் சனிக்கிழமை குறித்த நேர எல்லைக்குள் உரிய எண்ணிக்கையைவிட 3 ஓவர்களை இந்திய அணியினர் வீசியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

அதையடுத்து அணித்தலைவர் மகேந்திரசிங் தோனிக்கு அவரின் ஊதியத்தில் 60 சதவீதத்தை அபராதமாக விதிப்பதாக போட்டி மத்தியர்ஸ்தர் கிறிஸ் போர்ட் அறிவித்தார்.

ஏனைய வீரர்களுக்கு அவர்களின் ஊதியத்தில் 30 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. இப் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிபடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய அணி 6 விக்கெட் இழப்புக்கு 269 ஓட்டங்களையும் பெற்ற நிலையில் துடுப்பாட்டத்தை நிறுத்திக் கொண்டது.



போட்டியின் இறுதிநாளான நேற்று முன்தினம் சனிக்கிழமை வெற்றிபெறுவதற்கு 281 ஓட்டங்கள் தேவையான நிலையில் மேற்கிந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது.

அவ் அணி 7 விக்கெட் இழப்புக்கு 202 ஓட்டங்களை பெற்ற போது இறுதிநாள் ஆட்டம் முடிபுக்கு வந்தது.

இவ்விரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது போட்டி எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

# இலங்கையில் நடந்த போர்க்குற்றம் இந்தியா உடந்தையாக இருந்துள்ளது

## சென்னை பல்கலைக்கழக அரசியல்துறைத் தலைவர் தெரிவிப்பு

(சென்னை)

**தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான கோபத்தை வெளிப்படுத்தியதன் மூலம் இந்தியாவுக்கும், இலங்கை தமிழருக்கும் இடையிலான வரலாற்று தொடர்பை காங்கிரஸ் கட்சி மலினப்படுத்தியுள்ளதாக சென்னை பல்கலைக்கழகத்தின் அரசியல் மற்றும் பொது நிர்வாக துறையின் தலைவர் இரா.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்**

அத்துடன் இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகள் இந்தியாவை துரோகம் இழைத்துவிட்ட நாடாகவே பார்ப்பதாக அவர் த வீக்கென்ட் லீடர், எனும் ஊடகத்திற்கு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை தமிழர்கள் கடந்த அறுபது ஆண்டுகளாக அரசியல் மற்றும் சமத்துவ உரிமைகள் கோரி நடத்தி வந்த போராட்டம் சிறிலங்கா அரசாங்கத்தின் படை நடவடிக்கை மூலம் 2009-ம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதில் இந்தியாவின் வகிபாகம் குறித்து பல்வேறு தரப்புகளிலிருந்தும் கேள்விகள் எழுந்துள்ளன.

இலங்கை விவகாரம் தொடர்பில் இந்திய மத்திய அரசு வெளிப்படுத்தி வரும் அசமந்த போக்கை தமிழக அரசு பார்த்துக்கொண்டிருக்காது என்பதனை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மத்திய அரசுக்கு தெளிவாக இயம்பியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவைக்கான கடந்த தேர்தலில் காங்கிரஸ் தி.மு.க. கூட்டணியை தோற்கடிக்க செய்வதில் இலங்கை தமிழர் விரோதக் கொள்கையே பிரதான காரணியாக விளங்கியது.

வன்னியில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்டப் போரில் இந்தியா காத்திரமான பங்களிப்பை வழங்கியிருந்ததாகக் கூறியிருந்த படைத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் கூற்றுக்கு மறுப்பு தெரிவிக்காதன் மூலம் இந்தியா தனது இரட்டை முகத்தை வெளிப்படுத்தியுள்ளது

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு இந்தியா உடந்தையாக இருந்தமை பற்றிய குற்றச்சாட்டுகள் இந்தப் பின்னணியில் முக்கியத்துவம் பெறுகின்றன.

இந்தியாவின் இத்தகைய போக்கிற்கு எதிராக தமிழக மக்கள் போர்க் கொடி தூக்க ஆரம்பித்துள்ளனர்.

இலங்கைக்கெதிரான பொருளாதாரத்தடை உள்ளிட்ட இரண்டு பிரதான தீர்மானங்களை தமிழக சட்டப்பேரவையில் கடந்த மாதம் ஏகமனதாக நிறைவேற்றியதன் மூலம் தமிழக அரசின் நிலைப்பாட்டை உலக மக்கள் அனைவரும் உணரக் கூடியதாக இருந்தது.

சிறிலங்கா அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாக மனித உரிமை ஆர்வலர்கள், புத்திஜீவிகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை அயர்லாந்தின் டப்ளினில் இயங்கிவரும் மக்கள் நியாய சபை உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் என பல தரப்பினரும் எழுப்பிய கண்டனங்களின் எதிரொலியாகவே இவ்விரு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இலங்கை பற்றிய தமிழகத்தின் கொள்கையை இத்தீர்மானங்கள் மீளாய்வுசெய்யவழிவகுத்துள்ளதுடன் இலங்கை மீதான இந்தியாவின் கொள்கைபற்றியநாடாளுமன்றவிவாதம் ஒன்றை நடத்த மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் உரிமையை தமிழக அரசு கொண்டுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந)

## இலங்கையின் கொலைக்...

மணிக்கும் தொடர்ந்து சனிக்கிழமை இரவு 8.00 மணிக்கும் மீள் ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது.


இந் நிகழ்ச்சியை ஏபிசி தொலைக்காட்சியின் கெரி ஓ பிரையன் தொகுத்து வழங்குகின்றார்.

நடந்து முடிந்த போரில் எதுவித மக்களின் உயிரிழப்புக்களும் இடம்பெறவில்லை என இலங்கை அரசு இப்போதும் தெரிவித்து வரும் நிலையில் இக்காணொளியை பார்ப்பதன் மூலம் நீங்களே அதுபற்றிய முடிவினை எடுங்கள் என அத்தொலைக்காட்சி வெளியிட்ட குறிப்பு தெரிவிக்கின்றது. (ந)






## கண்ணீர் அஞ்சலி



S.K.செல்லையா புவனேந்திரன் (டோஜா)

சிரித்து மகிழ்ந்து இன்சொல் கூறிய
சுற்றத்தாரும் நண்பர்களும் கதறி அழுது புலம்ப
எம் இதயம் பரிதவிக்க ஆண்டவன் சோதனையோ
யார் தந்த வேதனையோ உன் உயிர் பாதியிலே
பிரிந்து போனதேனோ எம் ஆருயிரே
பிறவி ஒன்று இருப்பின் நாம் உன்னுடன்
பிறக்க பிரார்த்திக்கும்

பிரவீனா ஹாட்வெயார்
198, K.K.S றோட், யாழ்ப்பாணம்.
T.P : 0212224901
0774685157

உரிமையாளரும்,
ஊழியர்களும்,
S.K.கஜேந்திரன்,
மனைவி, மகள்

## போரில் இழந்த உயிர்களை...

இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சி வேட்பாளர்களுக்கான ஒருநாள் செயலமர்வு நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உலகில் எந்த நாடும் மூன்றில் இரண்டு பங்கு அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சி அமைக்கவில்லை. ஆனால் எமது நாட்டில் தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இவ்வாறானதொரு ஆட்சியை அமைத்துள்ளது. இதற்கு நீங்கள் வழங்கிய ஆதரவே காரணம்.

நாம் இப்போது எதிர்கொள்ளவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலின் 23 தொகுதிகளிலும் அதிக வாக்குகளை பெற்று வெற்றி பெருவோம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. இம் மாவட்டத்தில் சிறந்த பாடசாலைகள், சிறந்த சீமெந்து தொழிற்சாலை என்பன இருந்தன.

யாழ்தேவி புகையிரதப் பயணம் என எவ்வளவோ வசதிகளுடன் இருந்த யாழ். மாவட்டம். 30 வருடகால யுத்தத்தினால் இவற்றையெல்லாம் இழந்து தவிக்கிறது.

இவையெல்லாம் எமது முன்னைய அரசாங்கங்களினால் வட பகுதிக்குச் செய்யப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகும். வட பகுதி இழந்து போன அபிவிருத்தித் திட்டங்களை முழுமையாக நடைமுறைக்கு கொண்டு வரவுள்ளோம்.

இந்த 30 வருட காலத்தில் உலக நாடுகள் அபிவிருத்தி அடைந்த அளவிற்கு எமது நாடு அபிவிருத்தியடையவில்லை இதற்குக் காரணம் 30 வருட கால யுத்தம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

கல்விமான்களையும், சிறந்த விவசாயிகளையும், மீன்பிடியாளர்களையும் கொண்ட யாழ்.மாவட்டம் அவற்றை அத்துறையில் விருத்தி செய்ய முடியாதிருக்கின்றது. இதற்கான காரணத்தை மக்களாகிய நீங்கள் சிந்தித்ததுண்டா?

இரண்டு பரம்பரைகள் யுத்தத்தினால் தமது சுய முகத்தை இழந்து விட்டன. நாம் அழிந்து போனவற்றை பற்றி திரும்பதிரும்ப பேசுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

இழந்து விட்ட சமாதானத்தை 50 ஆண்டுகளின் பின் உங்களுக்கு பெற்றுத்தந்தவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே. சமாதானத்தை பெற்றுத்தந்தது மட்டுமல்ல கல்வி கற்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து யாழ்ப்பாணத்தில் தொழில்நுட்பக் கல்லூரியொன்றை நவீன வசதிகளுடன் அமைத்து தந்ததோடு, யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் ஒன்றையும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

வடமாகாணத்தின் அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுத்தது போன்று வேறு எந்த மாகாணத்திற்கும் நாம் அபிவிருத்தி பணிக்கு முன்னுரிமை கொடுக்கவில்லை.

வட மாகாணத்தில் மட்டும்தான் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. என்பதை நான் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்து வருகின்றார்.

எனவே மக்களாகிய நீங்கள் அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து அறிந்திருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)


## காணி விற்பனை

தெல்லிப்பளை அளவெட்டி வீதியில் பேரம்பல வைரவர் கோவில் அருகில் பிரதான வீதியுடன், வற்றாத நன்னீர்க் கிணற்றுடன் கூடிய 55 (ஐம்பத்தைந்து) பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0750414028

(C-3641)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.